போன் நெ. ... விலை 2 அணா REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 29—8—54 | இதழ் 9

‘மஞ்சள்’ கொலு!

“அவனை, இப்போதே வேலையிலிருந்து நீக்க வேண்டும்......”

“ஏன்?”

“ஏனா! எனக்குப் பிடிக்கவில்லை......”

அது, போதாதே!”

“அயோக்கியன்!”

“என்ன குற்றம் செய்தான்? இட்ட வேலையைச் சரிவரச்செய்யவில்லையா! தொட்ட ‘பைலை’ திறமையாகப் பார்க்கவில்லையா! தூங்குகிறானா, ஆபீசில்? லஞ்சம் வாங்கினானா? ஊழல், அதிகமா? எதற்காக, அவனை, நீக்கவேண்டும்......”

“அதெல்லாமில்லை......”

“பிறகு......?”

“அவனை, நீக்கப்போகிறீரா, இல்லையா? விளக்கம், ஏன்?”

“நாடு, கேட்குமே! நாட்டுக்குப் பதில் சொல்ல-வேண்டிய முதல் அமைச்சனல்லவா, நான்?”

“எனக்குப் பிடிக்கவில்லை”

“ஊரார், அவனைப்புகழ்கிறார்களே!”

“ஊராரின் புகழ்ச்சியைப்பொருட்படுத்தப்போகிறீரா — அல்லது, மந்திரியாகிய என் சொல்லைக் கேட்கப் போகிறீரா?”

*

அதட்டிக் கேட்கிறார், அமைச்சர்! என்ன செய்வது? ஆளும்அவையில் தக்கதோர் இடம் பெற்றவர், அவர். அவர் கோஷ்டியின் ஆதரவால்தானே முதல் மந்திரியானோம், என்றெண்ணுகிறார், முதலமைச்சர். குழம்புகிறது, மனது! நீக்கிவிடலாம் —சுலபம், ஒரு எழுத்தில் தீர்ந்துவிடும். காரணம், வேண்டுமே, அப்படிச் செய்ய! நீக்கும்படி, அமைச்சர் கூறும் ஆளோ ,சாதாரண ‘ஜவான்’ அல்ல; அப்படியிருந்தால் வேலை, சுலபம்—பெரிய அதிகாரி, சர்க்காரின் காரியதரிசி. சஞ்சலம் ஒரு பக்கம்! சங்கடம் மற்றோர் பக்கம்!! ஏன், அந்த அதிகாரியை நீக்கவேண்டும் என்று இவ்வளவு தூரம் சண்டைக்கு வருகிறார்? காரணமில்லாமலா, இருக்கும்! அதுவும், நாட்டை புனிதப் பூமியாக்கப் போராடிய காங்கிரஸ் தியாகியாச்சே!!

*

“அமைச்சரே! விஷயம், விளங்கிவிட்டது எனக்கு. அந்த அதிகாரி, ஒரு ஐ. சி. எஸ். காரன். ஐ. சி. எஸ்-களையெல்லாம் சுயராஜ்யம் பெற்றதும், ஆற்றில் போடுவோம்— என்று சொன்னோம், கூட்டத்தில் பேசிய நாளில். அதை நினைத்துக் கொண்டு இப்போதுவந்து இப்படிச் செய்யலாமா? ஐ. சி. எஸ். காரர்களும், இந்த நாட்டில் பிறந்தவர்கள்தானே!! அவர்களில்லாவிடில் எந்த வேலையும் சுலபமாகமுடியாது என்று ஜவஹர்லால்நேரு கூடச் சொல்லவீயோ? வேண்டாம், பிடிவாதம்! அவர், ஐ. சி. எஸ். என்பதால், ஆத்திரம் காட்டாதீர்கள்.”

‘யாரய்யா, நீர்? அவன் ஒரு ஐ. சி. எஸ். என்பதாலா, நீக்கவேண்டும் என்று உம்மிடம் சொன்னேன்!”

“பிறகு......?”

“அதற்காக அல்ல......”

“வெள்ளையனிடம் வேலைபார்த்தவன் என்பதாலா?”

“அதுவும் இல்லை!”

“பிறகென்ன காரணம்?”

“என்னை, அவன் மதிக்கவில்லை!”

*

எனக்குப் பிடிக்கவில்லை!

ஏனெனில்,

என்னை, அவன் மதிக்கவில்லை!— எனவே......என்கிறார், அமைச்சர்! அமைச்சருக்குப் பிடிக்காத அந்த அதிகாரியோ, நாடும் ஏடும் பாராட்டக்கூடிய அளவுக்குப் பணிபுரிந்து வருபவர். சர்க்காருக்கே திட்டம் தீட்டிக்கொடுக்கக்கூடிய அளவு புத்திநுட்பம் பெற்றவர். சமுதாய நலமா? சர்க்காரின் நலமா? ஐந்தாண்டுத் திட்டமா? மின்சார அபிவிருத்தியா? ஆலைகள் புதிதாக அமைக்கப்படவேண்டுமா? கிராமப் புனருத்தாரணமா?—எல்லாவற்றிற்கும், திட்டம் தீட்டி, ஏட்டளவில் நில்லாது, நாட்டின் நாலுபக்கங்களிலும் அவைகளைச் செய்தும் வருபவர். அவரை, நீக்கவேண்டும், என்கிறார், அமைச்சர்! என்னசெய்வது? அமைச்சரோ, நண்பருக்கு நண்பர்— தியாகிக்குத் தியாகி. யோசிக்கிறார்,

முதல்வர்! அமைச்சரை, அழைக்கிறார்.

*

"நண்பரே! போன தடவை, நமது ராஜ்யத்துக்கு பண்டிதநேரு விஜயம் செய்தபோது..."

"நானும் போயிருந்தேன். கூட வருமாறு, அவரே, என்னைக் கூப்பிட்டாரே!"

"ஆமாம்! நாட்டில் நடைபெற்றுவரும் அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் அழைத்துப் போய் காட்டினீரல்லவா?"

"ஓ! சந்தோஷப்பட்டாரே—"

"அபிவிருத்தி இலாகாவின் சேவையைப்பற்றி அகமகிழ்ந்து பேசினாரல்லவா?"

"ஆமாம்! நான்தானே அபிருத்தி மந்திரி—அதை மறந்துவிடுவேனா?"

"அப்போது...கவனம், இருக்கிறதா, அவர் சொன்னது?"

"எதைப்பற்றி?"

"இப்போது, விலக்கவேண்டும் என்று சொல்கிறீரே, அந்த அதிகாரியைப்பற்றி..."

"என்ன சொன்னார்?"

"இப்படியொரு அதிகாரிகிடைத்திருப்பது இந்த ராஜ்யத்துக்கு பெரியவரப்பிரசாதம்! அவருடைய ஓயாத சேவையால், இவ்வளவும் உருப்பெற்றிருக்கின்றன"

"ஆமாம் சொன்னார், நானும், ஒத்துக்கொள்ளுகிறேன். அதனால் என்ன? என்னை மதிக்கவில்லையே, இவன்!!"

*

முதலமைச்சரின் முயற்சி பலிக்கவில்லை! என்னசொன்னாலும், 'என்னை மதிக்கவில்லையே, இவன்!' என்று ஆத்திரமாகப் பேசுகிறார், அமைச்சர். அட, போய்யா! உன்னை அவன் மதிப்பதற்கும், ராஜாங்கம் நடப்பதற்கும் என்னய்யா, சம்பந்தம்? மதிப்பு, என்ன, கடையில் வாங்கக்கூடிய பொருளா! அவன் மதிக்கவில்லையென்றால், அவன் மதிக்கக்கூடிய வகையில் நீர் நடந்திருக்க வேண்டும்? நாம்தான், நிர்வாகத்துக்குப்புதிதாச்சே! எல்லாம் தெரிந்தவர்கள்போல், குதித்தால், இளக்காரம் ஏற்படத்தான் செய்யும் ஆட்சி இயந்திரத்தை ஆண்டாண்டு காலமாக அனுபவித்துவரும் அதிகாரிகளுக்கு அதை மனதில் வைத்து, தட்டிக்கொடுத்து நம்முடைய கௌரவத்தையும் மானத்தையும் காப்பாற்றிக் கொள்வதா? அதைவிட்டுவிட்டு, மந்திரிப்பதவி கிடைத்ததென்றதும், மனம்போன போக்கில் ஆடலாமா! அவனை இப்போது விலக்குகிறேன், என்றே வைத்துக் கொள்ளும். அவனுக்குப் பிறகு, இந்த வேலையைச் செய்ய, உம்மால் முடியுமா! தகுதியான ஆளைத்தான் தயாரித்திருக்கிறீரா!! பெரிய பதவி, என்பதால் பிடித்தவனையோ—சொந்தக்காரனையோ பிடித்து வைக்கலாம். பிரயோஜனம்? ஊழலும்புயலும்தானே மிஞ்சும்! இந்த உபத்திரவம் எல்லாம் என் காலத்தில் வேண்டாம்!! என்று, கூறமுடியும், முதலமைச்சர். அப்படிச்சொன்னால், திருப்பிக்கேட்பாரல்லவா, அமைச்சர்—சரிதானய்யா! என்னமோ பெரிய பாரத்தைச் சுமந்துவைத்திருப்பது போலப்பேசுகிறீரே? நீர் முதலமைச்சராயில்லாவிட்டால், நாடு என்ன, கடலிலா மூழ்கிவிடும்! 'பைலை'ப்புரட்ட — ஆளும் திட்டம் தீட்ட அதிகாரியும் தேவை என்பதற்காக, மரியாதை தெரியாதவனையெல்லாம் வைத்துக்கொண்டு பம்பரம் விளையாடுகிறீரே! உம்யோக்யதை, எனக்குத் தெரியாதா — என்று. இருவரும், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானே!! எனவே, முதலமைச்சரும் பேசவில்லை. அமைச்சரும் பதில் கூறவில்லை. ஆனால், இருவரும், தந்தமக்குத் தெரிந்த காங்கிரஸ்காரர்களிடமெல்லாம் சொல்லிக்கொண்டனர்.

"ஒரு காங்கிரஸ் தியாகியை மதிக்காத ஒரு சாதாரண சர்க்கார் காரியதரிசிக்கு பயப்படுகிறாரய்யா, இவர்! 'பஞ்சாப் பகவத்சிங்கம் — தூக்கில் மாண்ட தங்கம்' என்று பேசியவர்தான் இப்படிப் பயப்படுகிறார்!!"

"என்னைச் சொல்லவந்துவிட்டாரே, இவர்? ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வந்த........என்று ஆரம்பித்து சண்டப்பிரசண்டம் செய்து மக்களின்மனதில் மரியாதையைப் பெற்ற இவருக்கு ஒரு சாதாரண சர்க்கார் அதிகாரியின் மரியாதையைக் கூடப் பெறத் தெரியவில்லையே!"

"எனக்குத் தெரியும். என்றாலும் அவன் ஒரு திமிர்பிடித்த ஆள்!"

"அதில் என்ன தப்பு? நம்மைவிட, தகுதியும் திறமையும் அதிகம் இருக்கும்போது, அவனுக்குத்திமிர் பிடிப்பதில் என்ன தப்பு?"

"முதலமைச்சர், நாம் எதற்குமே லாயக்கில்லை என்கிறார்!"

"உண்மைதானே!"

இப்படியுமல்ல, அவர்கள் பேசிக்கொண்டது! இப்படி, மனம்விட்டு உரையாடினால்தான், மாச்சரியங்கள் போய் ஒற்றுமை உண்டாகிவிடுமே. அதற்குப் பதில், இருவரும் தந்தமக்குள்ள பலத்தைப் பரீட்சை பார்க்கும் வேலையில் ஆரம்பித்தனர். அமைச்சர், ஒரு கோஷ்டி அமைத்தார்—முதலமைச்சரும் ஒரு கோஷ்டி உண்டாக்கினார் — மந்திரி சபைக்குள்ளேயே மண்டையிடி சண்டை வளர்ந்தது — கட்சிக்குள்ளும் பூசல்—கடைசியில், சிலர் தலையிட்டனர் — விஷயம் 'டில்லி'க்குப் போயிற்று—பண்டிதர், தீர ஆலோசித்து, கடிதம் தீட்டினார்:—

"அன்பர்களே!

உங்கள் ராஜ்யத்தில் நடைபெறும் விஷயங்களை அறிந்து கிலேசமும் கவலையும் அடைந்தேன். இப்படியெல்லாமா, சில்லறை விஷயங்களுக்காக, நமக்குள் சண்டைபோட்டுக்கொள்ளவேண்டும். தேசத்தைப் பலவீனப்படுத்த, ஆங்காங்குள்ள தீயசக்திகள் வளர்ந்துவரும்போது, பெரிய கட்சியாகிய நாம், இப்படியா நடப்பது?. சர்க்காரையும் அதே நேரத்தில் காங்கிரஸையும் கட்டிக் காத்தால்தான், உலகத்தில் நாம் பெற்றிருக்கிற உன்னத ஸ்தானத்தைக் காப்பாற்றிக்கொள்ளமுடியும். ஆகவே, என்னுடைய யோசனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். தன்னை மதிக்கவில்லையென்று அமைச்சர் குற்றம் கூறியிருப்பதும் கவனிக்கப்படவேண்டியதே. அந்த அதிகாரியின் சேவை நாட்டுக்குத் தேவையென்று முதலமைச்சர் குறிப்பிட்டிருப்பதும் சரியானதே. இருவரையும் நாம் இழக்கக்கூடாது. ஒருவர்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் நல ஆட்சி

இருதயராஜ் M.A.

5

தொழிலாளரை, அரசாங்கம், அவர்களுக்குப் பிடிக்காத ஒரு தொழிலை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்க முடியாது. உதாரணமாக, சுரங்கங்களில் வேலைசெய்யப் போதிய தொழிலாளர் கிடைக்காமல், நாட்டுக்குத் தேவையான நிலக்கரி உற்பத்தியாகவில்லை என்று வைத்துக்கொள்ளுவோர். அரசாங்கம் சுரங்கத் தொழிலாளரை நாட்டின் நலனைக் காரணமாகக் காட்டி, பொது உடைமை அமைப்பில் நடப்பதுபோல், நிலக்கரிச் சுரங்கத்துக்குப்போய் வேலைசெய்யவேண்டும் என்று கட்டாயப்படுத்தமுடியாது.

பிறகு எப்படி நிலைமை சரிப்படும்? சுரங்க முதலாளிகள் தொழிலாளரை இழுப்பதற்காக அவர்களின் கூலியை உயர்த்தவேண்டும். சில சவுகரியங்கள் செய்துதரவேண்டும். அப்பொழுது வேண்டிய சுரங்க வேலைக்காரர்கள் கிடைப்பார்கள். அதனால் நிலக்கரியின் விலை உயரத்தான் செய்யும். விலை உயர்ந்தால் உபயோகிப்பவர்கள் முன்னையைப் போல் அவ்வளவு நிலக்கரி உபயோகிக்க மாட்டார்கள், சிக்கனம் செய்வார்கள். இதனால் அரசாங்கத்தின் தலையீடின்றியே நிலைமை சரிப்பட்டுவிடும். முன்னே மக்கள் தேவை அதிகமாயிருந்து, சுரங்கங்களில் உற்பத்தி குறைவாயிருந்தது. இப்பொழுது சுரங்கங்களில் உற்பத்தி அதிகரித்து ஆனால் மக்கள் தேவை குறைந்திருக்கிறது. அதனால் நிலைமை சரிக்கட்டிவிடும்.

போட்டிப் பொருளாதார அமைப்பில் மக்களுடைய கதி? அவர்களுடைய விருப்பமும் நாட்டமுமே நாட்டின் தொழில் வளர்ச்சியை உருவகப்படுத்தும். உண்மையிலேயே இந்த அமைப்பில் மக்கள் தான் மன்னர்கள். மக்கள் எதை விரும்புகிறார்கள், எதை விரும்புவார்கள், எப்படி உற்பத்தி செய்தால், மக்களுடைய மனதுக்குப் பிடிக்கும்படி, மக்கள்மனம் கோணாதவாறு, மக்கள் விரும்பித் தங்கள் பொருளைத் தேடிவரும் விதத்தில் முதலாளிகள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துகிறார்கள்?

ஒரு சாமானுக்குக் கிராக்கி குறைகிறது. சாமான் தேங்கிக் கிடக்கிறது. உற்பத்தி செய்யும் முதலாளி விலையைக் குறைத்து விற்கப் பார்ப்பார். அதனால் கூலியைக் குறைக்க வேண்டிவரும். கூலி குறைந்தால் தொழிலாளர் வேறு தொழில் தேடிச் செல்வார்கள்.

அப்படிக் கூலிக் குறைவதைத் தொழிற்சங்க முயற்சியால் எதிர்த்துத் தொழிலாளர் வெற்றிபெற்று, முதலாளிகளைப் பழைய கூலியே கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினால், அத்தொழிலில் தடுமாறிக் கொண்டு லாபமுமின்றி ஏதோ மூடிவிடாமல் தொழிலை நடத்திக் கொண்டுவந்த ஒன்றிரண்டு பேர் தொழிற்சாலையை மூடுவார்கள். அதனால் உற்பத்தி குறையும். சாமான்கள் முன்னையைப்போல் அதிகம் விற்பனைக்கு வராது. அவைகளின் விலை சிறிது அதிகரிக்கும். அதிக விலைக்கு விற்பதால் முதலாளிகள் கொஞ்சம் அதிகக் கூலி தருவார்கள். அதனால் வேலையிலிருந்து தள்ளப்படாத தொழிலாளரின் நிலை சீர்படும்.

ஒரு தொழிலில் லாபம் அதிகமாக இருப்பதைக் கண்டு, பணம் வைத்திருப்பவர்கள் இயற்கையாக அந்தத் தொழிலையே மேற்கொள்வர். புது முதலாளிகள் தோன்றியதும் அந்தத் தொழிலில் உற்பத்தி பெருகும். மக்கள் தேவைக்குமேல் சாமான்கள் அதிகமாக விற்பனைக்கு வந்து அவ்வளவையும் விற்றுவிட வேண்டுமென்று முதலாளிகள் தங்களுக்குள் போட்டியிடுவதால் அதன் விலை குறையும். விலை இறங்கிக்கொண்டு போவதால் அந்தத் தொழிலில் லாபமுமில்லாமல், ஆனால் அதிக நஷ்டமுமில்லாமல், இருக்கலாமா, விட்டுவிடலாமா என்று மயங்கிக்கொண்டிருக்கும் ஒன்றிரண்டு முதலாளிகள் அந்தத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலைத் தேடிப் போவார்கள். இப்படியே லாபகரமாயுள்ள தொழிலைத் தேடிப் பணத்தை அதில் போடுவதும், அது காரணமாக லாபம் குறையத் துவங்கியதும் மற்றத் தொழில்களைத் தேடுவதும், அதனால் எந்தத் தொழிலுமே அதிக காலம் அபரிமிதமான லாபம் வராததுமே போட்டிப் பொருளாதாரத்தின் சாதாரண நடப்பு. எனவே மக்களின் சேமிப்புத் தொகைகள் எப்பொழுதுமே லாபகரமான துறையைத் தேடியே செல்லும்.

இந்த முறையில் எந்தத் துறையிலும் எவரையும், யாரும் கட்டாயப்படுத்துவதில்லை. மக்கள் தங்களுக்கு விருப்பமுள்ள சாமான்களை வாங்குகிறார்கள். தொழிலாளர் தங்களுக்குப் பிடித்த தொழிலில், வேண்டிய முதலாளியின் கீழ் தொழில் பார்ப்பார்கள். முதலாளிகள் எது லாபகரமான தொழிலோ அதைத் தேடித் தங்கள் மூளையையும் முதலையும், சாமர்த்தியத்தையும் உபயோகிப்பார்கள். லாபத்தைக் கருதி முதலாளிகள் தங்களுக்குள் போட்டியிட்டுக்கொண்டு தங்கள் உற்பத்திச் செலவைக் குறைக்க புதுப்புது வழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டே இருப்பார்கள். அதனால் தொழிலில் முன்னேற்றம் காண முடியும். (13 பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

கட்சிக்காரர்! இன்னொருவர் திறமையுள்ள அதிகாரி!! ஆகவேதான் இந்த யோசனை. அபிவிருத்தி இலாகாவின் மந்திரியாக இருப்பதால்தானே அந்த அதிகாரிக்கும் மந்திரிக்குமிடையில் 'மதிப்பு' பிரச்னைவருகிறது. அதனால், யாராவது ஒருவர் தங்கள் பொறுப்பை, வேறு இலாகாவுக்கு மாற்றிக்கொள்வது நல்லது. அதன்படி பார்த்தால் அதிகாரியை வேறு இலாகாவுக்கு மாற்றுவது நல்லதல்ல—ஏனெனில் அவர், பல காரியங்களைச் செய்துகொண்டிருப்பவர். எனவே, அமைச்சருக்கு வேறு இலாகாகொடுத்து, அவரை எப்போதும்போல் மந்திரியாக இருக்கும்படி செய்யுங்கள்."

*

கடிதம் வந்தது! காரியமும், அப்படியே நடந்தது!! ஆனால், அமைச்சர், கொஞ்சம் தன்மானமுடையவராயிருந்ததால், தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு விலகி விட்டார். அவர் பெயர், ஆர். கே. பட்டேல்! முதலமைச்சர், ரவி சங்கர் சுக்லா! அதிகாரி, எஸ். என். மேத்தா!—நடைபெற்ற ராஜ்யம், மத்யபிரதேசம்.

✕

'பட்டம் பறக்குதடீ பாப்பா!'

"ஆகா! அந்தப்பாடலுக்கிருந்த மகத்துவம்தான் என்ன!

'பபூனி'லிருந்து 'ராஜபார்ட்'வரை பாடி அப்ளாஸ் பெற்ற அற்புத 'ன்னி!!

"பட்டம் பறக்குதடீ! — மூலம் சுயராஜ்ய வெறியையும், தேசபக்தியையும், தூண்டிவிடுறு," என்று துதி செய்தோர், தொகை எவ்வளவு!

"ராவ்பகதூர்! என்னய்பா, ராவும் பகதூரும்!!"—என்னென்ன விதமான, கிண்டல்களைகள்!!

"திவான்பகதூராமே, திவான்! எந்தச் சமஸ்தானத்துக்கய்யா இவர் திவான்?" — எத்தனை பேரைப் பார்த்துக் கேட்டேன், அப்படி!!

'ஸர்' என்ற போர்டில் 'புர்' என்றெழுதி, எவ்வளவு பூரிப்பேன் தெரியுமா, அப்போது! என்காலத்திலா இப்படி நடக்கவேண்டும்? பட்டம்பெற்ற கட்சிஎன்று பரிகசிப்பேன்—ஜஸ்டிஸ் கட்சியை! அந்தப் பழிசொல்லே பஸ்மாரணமாகி, தகித்தது, அக்கட்சியை. பட்டம் பெற்றோர், சர்க்காரின் அடிவருடிகள்!—அன்று, நான் கூறியவார்த்தைகள், இன்னும் மக்கள் மனதில்இருக்கின்றன. யாருமே தன்னுடைய பட்டப்பெயரை வெளிக்குச் சொல்லிக்கொள்ள, வெட்கப்படுகிறகாலம் இது! இப்போது, பட்டமமாம்! மீண்டும் சூட்டப்படுகிறதாம்!! பத்மவிபூஷணமாம் — பாரதரத்னமாம். கேள்விப்பட்டேன் — திக்குண்டமானேன். திகைக்கிறேன்! காங்கிரஸ் அரசு, வழங்குகிறதாம்! டில்லிபீடாதிபதி அளிக்கிறாராம்!! ஆங்கில சாம்ராஜ்யம், ஆறுயிரம் மைல்களுக்குக்கப்பாலிருந்தது—வெளியிலே உள்ள நாடுகளை ஆள, ஆள்பிடிப்பதற்காக, அடிவருடிகளைத் தயார் செய்தான்—பட்டங்கள் வழங்கினான் வெள்ளையன். இந்தியாதான் ஒரே தேசம் என்கிறார்களே—இங்கே, அடிவருடிகள் எதற்கு? ஏனிந்தப் பட்டமளிப்பு! ஒன்றும் விளங்கவில்லை, எனக்கு. உழைத்தவன், நான்! கதர்க்கொடி பிடித்தகை, இதோ!! கவனத்தில், அன்றைய காட்சிகள் இன்னும் உலரவில்லை. நினைத்துப்பார்க்கிறேன்! நெருப்பாகிறது, நெஞ்சம்!!"

*

காங்கிரஸ் கட்சிக்காக மேடைதோறும் பாடிய விசுவநாததாஸ் எனும் நடிகமணி இருந்திருந்தால், இப்படித்தான் எண்ணியிருப்பார்! சுதந்திர விதையைத் தூவிய காங்கிரஸ் சிம்மங்கள் உயிரோடிருந்திருந்தால், பட்டம் வழங்கிய கையை, சுக்கு நூறாக்கியிருப்பர்!! அவர்கள் யாவரையும் சமாதிக்கனுப்பி விட்டோம்—தட்டிக் கேட்கயாரிருக்கிறார்கள்—எனும் துணிவில் டில்லி அரசு, அண்மையில், பட்டங்கள் வழங்கியிருக்கிறது, பலருக்கு. வெள்ளிப்பதக்கமாம்! தங்கமெடலாம்!! சுதந்திரக் குரல் முழக்கிய அற்றை நாள் சொன்னதெல்லாம், காற்றோடு போனதுபோல, 'பட்டப்பிரச்னை'யும் பறந்திடுமென்று கருதவில்லை, நாம். உயிரோடிருக்கும் உத்தமத்தியாகிகள், இதுபோது, மூக்காடிட்டுக்கொண்டு உலவிக்கொண்டுள்ளனர்—ஊர்தோறும், உண்மையானகாங்கிரஸ் அன்பரைக் கேளுங்கள்—ஒரு பெருமூச்சு குரல் கம்முகிறது! உணர்ச்சி வசப்படுபவராயிருந்தால், கண்ணீரே சிந்துவார்!! எச்சில் இலைகள்—என்பர், பட்டங்களை. அதனைப் பொறுக்க ஓடிடும் குக்கல் என்றுரைப்பர்—பட்ட வேட்டையாடிகளை. இன்று! யாரை, யார் சொல்வது, துப்பிய எச்சிலை விழுங்கும் துரைமகன்கள் ஆட்சி செய்யும் போது!! பத்மவிபூஷணமாம்—பாரத ரத்னமாம். பெரியவர்களின் சேவையைப் பாராட்டவாம். பட்டம்பெற்றவர்களின்பெயர் வரிசையைப் பார்க்கும்போது, இந்த அரசு யார்யாருக்கு பட்டங்கள் வழங்கியிருக்கிறதோ அவர்கள் அத்தனைபேரும் இந்தப்பட்டங்கள் இல்லாவிடினும், பிரகாசிக்கக் கூடியவர்கள்தான். ஜனாதிபதி வழங்கிய சின்னத்தைப் பெற்றதால் அல்ல, சர். சி. வி. ராமன், உலகுக்கு அறிமுகம் செய்யப்படுவது! டில்லி தந்த 'பூஷணத்தால்' அல்ல, லட்சுமணசாமியின் புகழ்பரவப்போவது! கானக்குரல்சுப்புலட்சுமி, இனிமேல்தான், மக்களின் அன்பைப்பெற வேண்டுமென்பதல்ல!! அவர்கள் ஒவ்வொருவரும், பிரசாத் பிரமுகராகுமுன்பே, தத்தமது உழைப்பாலும் வாய்ப்பாலும், மக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டவர்கள். அவர்களுக்கு, ஆண்டு ஏழுக்குப் பிறகு, பட்டமாமே பட்டம்! பாரதமும் பூஷணமுமாமே!! ஓட்டப்பந்யத்தில் ஓடி வெற்றி பெற்ற வீரன், வீட்டிற்குச் சென்று விலாப்புடைக்கத்தின்றுவிட்டு, இளைப்பாறும்நேரத்தில், கர்த்தபக்குரல் எழுப்பும் காளைகள் பலரோடு அவன் வீட்டுக்கு முன்நின்று, சபாஷ்! சபாஷ்!! ஓடு. விடாதே. பிடி!' என்று கூச்சலிடுவோனை என்னவென்று எண்ணு

வீர். கூச்சல் தாங்காது அக்கம் பக்கத்திலிருப்போர் அந்தக் குறுமதியாளனிடம் வந்து விபரம் கேட்க, 'ஐயா! ஏன் இப்படி கை தட்டி ஆரவாரம் செய்கிறோம், தெரியுமா! இதோ, இந்த வீட்டிலிருக்கிறானே, அந்த வீரன் ஓட்டப்பந்தயத்தில் ஓடிய வேகத்தைக் கண்ணாரக் கண்டோம். அங்கே, கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவிக்க, மறந்தோம்! ஊருக்குள் போனதும், ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். அதனால் வந்தோம்! இப்போது, ஒட்டிக்கு ரெட்டியாக வட்டியும் முதலுமாய் வழங்குகிறோம்!!", என்று பதிலுரைத்தால், எப்பெயரிட்டு அழைப்பீர், அக்கும்பலை அதனினும்கேடுகெட்டோரின் ஆட்சியாகவா, மாறவேண்டும், லஜபதியும்பாலகங்காதரரும், திலகரும்; தேசபந்தும், அரும்பாடுபட்டு வளர்த்தகட்சி? பட்டமாம்! சூட்டுகிறார்களாம்!! வளர்ந்தவர்களின் பின்னால் வாலைக்குழைத்தோடுபவர்களை கண்டிருக்கிறோம்— வாழ்க்கையில்— அவன் யார் தெரியுமா? என்னுடைய அனுக்ரகத்தைப்பெற்றவன்! உலகம் புகழும் அந்த நடிகனை மேடைக்கேற்றி புகழ்வரச் செய்தவன், நான்தான்! இப்படிக் கூறியவண்ணம்— 'காக்கா' பிடிப்போருண்டு. அந்த நிலையா, வரவேண்டும் ஒரு ஆட்சிக்கு? ஆச்சாரியாருக்கும், கெர்-ருக்கும் இந்த பட்டங்கள் சூட்டாவிட்டால், என்ன! எதற்காக பத்மவிபூஷணமும், பாரதரத்னமும்? அவர்கள் எல்லாம், எமதுபட்டங்களைப் பெற்றவர்கள்!—என்று வெளியில் சொல்லிக் கொள்ளவா? தேசத்தியாகிகளுக்கும் பட்டம் கிடைத்திருக்கிறது! 'தேசத்துரோகிகளுக்கும்' தரப்பட்டிருக்கிறது! இரண்டும் கெட்டான்களுக்கும் அளிக்கப்பட்டிகிறது! ஏன்?— அதைத்தான், உண்மையான தேசிய ஊழியன், கேட்கிறான். டாக்டர் லட்சுமணசாமி, துரோகி என்று தூற்றப்பட்டவர்—அவருக்கும் பட்டம். ஆச்சாரியார் தியாகி எனப் போற்றப்பட்டவர், அவருக்கும் பட்டம். இரண்டுக்கும் சம்பந்தமில்லாதவர், சுப்புலட்சுமி—அவருக்கும் பட்டம். பாராட்டவாம்! கௌரவிக்கவாம்!!

*

"நாட்டுக்குச் சேவை செய்யும் எமக்குபட்டமேன், பதக்கமேன்? இதனைஎதிர்பார்த்தா,தேசசேவைக்கு வந்தோம்! எத்தனைமுறை, இந்தக் கேட்டைக் கண்டித்து பேசியிருக்கிறோம் இப்போது நீங்களேபட்டமளிக்கிறீர்களே! இதோ, உங்கள் பட்டம். வேண்டாம், எனக்கு" என்று வீரமாது ஒருவர், பாரதத் தலைவர் அளித்த பட்டத்தை வீசியெறிந்திருக்கிறார்! எதிர்க்கட்சிக்காரரல்ல—இந்த ராசேந்திரபிரசாத் கொடுப்பதா, நாம் வங்குவதாஎன்ற எண்ணம் கொண்டவரல்ல,உண்மையான காங்கிரஸ் ஊழியர்—காந்தியடிகளின் அருகிருந்து சேவைசெய்யும் பாக்யம் பெற்றவர்—ஆஷாதேவி எனும் பெயர்பூண்ட அம்மை. அரசு அளித்த பட்டத்தை வீசியெறிந்திருக்கிறார்! அதன் மூலம், இந்திய வரலாற்றில், புதுக்குறிப்பைப் பொறித்திருக்கிறார்! வீரமாது, அவர்—பலன் காணாமல் பாடுபடும் காங்கிரஸ் சேவகி—அரசினருக்கு அவர் தீட்டியிருக்கும் கடிதம். ஒரு எரிமலை! ஊர்தோறும், மாற்றாரின் கேலிக்கு ஆளாகி முக்காடிட்டுச் செல்லும் உண்மை தேசிய ஊழியர்களின் உள்ளக்குமுறலின்எதிரொலி அக்கடிதம்! "மக்களுக்குச் சேவை செய்பவர்கள் பட்டத்தை விரும்பி பணியாற்றவில்லை"- எவ்வளவு அருமையான வாசகம்! இதைவிட, வேறென்னவேண்டும் காங்கிரஸ் தலைவர்களுக்கு? பட்டத்தை விரும்பியல்ல பணியாற்றுவது!—கூறுவது ஆஷாதேவி. பட்டம்வேண்டேன் பதவிவேண்டேன், சுற்றம்விரும்பேன், சொந்தம் தொடேன், சுதந்திரமே என்காதலி! விடுதலையே என் தாய்! என்று வீரமுழக்கமிட்டு இன்று சிம்மாசனத்தில்அமர்ந்திருக்கும் சிலர்களைப்பார்த்து செப்புகிறார், ஆஷா—'உண்மையான தொண்டர்கள் பட்டங்களுக்காக அல்ல, பணியாற்றுவது' ஆகா! இந்த பதில் ஒன்றுபோதும், பண்டிதருக்கு — ஆஷாதேவியின் சொல்லொன்றுபோதும், அவரைச் சுட்டெரிக்க. பட்டமாம்! யாருக்கு? மக்கள் தொண்டர்களுக்கா! நீங்கள் என்னபட்டம் கொடுப்பது? உங்களை அரசிலே அமர்த்தியோரே நாங்கள்தானே! எங்களுக்கு, நீங்கள் யார்பட்டம்தர? அரசுகளை ஆக்கவும் அழிக்கவும், தலைவர்களை போற்றவும் வீழ்த்தவும் சக்தியாய்ந்த தொண்டர்களய்யா நாங்கள்! தொண்டர்கள், எங்களுக்கா பட்டம்? நீங்கள் தரும் பட்டத்தைவிட பெரியபட்டம் எங்களுக்கு தரப்பட்டுவிட்டது. உன்னைவிட சாசுவதமான மக்கள் மன்றத்தின் பட்டத்தைப் பெற்றுவிட்டோம்— அதுதான் மக்கள் அன்பு!—என்று, கூறாமல் கூறுகிறார், ஆஷா, அச்சிறு கடிதமூலம். வீசியெறிகிறார், தனக்கு அளிக்கப்பட்ட பட்டத்தை! அவரால் முடிகிறது— அரசுக்குப் புத்திபோதிக்க ஒரே ஒரு ஆஷாதான் கிடைத்தார்— ஆனால், பட்டம் பெற்றபிறர், பேசாது இருக்கிறார்கள்!! டாக்டர் லட்சுமணசாமி போன்றோர், பட்டங்களை வெள்ளையன் காலத்திலும் பெற்றவர்கள், இப்போதும் பெறுகிறவர்கள்—அவர்களுக்கு இது ஓர் தினசரித் தொழில்போல. ஆனால், அகிலம் புகழும் ஆச்சாரியாரும் பிறரும் அப்படியல்ல! மக்களின் தலைவர்கள்!! ஆனால், ஒரே ஒரு ஆஷாதான், அரசுக்குப் புத்தி போதிக்கவருகிறார் — ஏனையோர், முன்வரவில்லை ஏனெனில், ஆஷா, 'தொண்டே வாழ்வே' என்று கிடக்கிறார்—பணியினைக் காட்டி படாடோபமாக வாழும் ஆசையில்லை அவருக்கு—மக்கள் பணியே பூஜை! தேசத்தொண்டே தெய்வத்தொண்டு! என்று கிடப்பவர். மக்கள் மத்தியிலிருப்பவர். அதனால், துணிந்து, அரசின் பட்டத்தை வீசுகிறார்! பட்டத்தைவிட, மக்களின் அன்பு பெரிதென எண்ணுகிறார்!! அத்தகைய ஆஷாக்கள், காங்கிரசில் ஆயிரமாயிரம் உண்டு—அவர்களால்தான், காங்கிரசின் மூச்சு இன்னும் நின்றுபோகாமலிருக்கிறது. அப்படிப்பட்டோர், வீசியெறிகின்றனர், விருதுகளை! வெண்சாமரக் குடையும் ஆடம்பரமும் அலங்காரப் பவனியும் விரும்பும் தலைவர்கள் பேசாது இருக்கிறார்கள்!! அவர், தொண்டர். இவர்கள், தலைவர்கள்—அவர், மக்களை நினைப்பவர் இவர்கள், மறந்தவர்கள். மக்களின் தூதர், இடித்துரைக்கிறார், ஆட்சியை! மக்களுக்காகப் பணியாற்றிய உத்தமர் காந்தியடிகளின் ஏடு "ஹரிஜன்" கோபாவேசமாகத்

[9ம் பக்கம் பார்க்க]

இதயம் உள்ளோர் நாம்!

தூய்மையே நம் தொண்டு

இதுவே, வெற்றி 'இரகசியம்'

பணி புரிவீர்! படை பெருக்குவீர்!!

அம்மையப்பன் தந்த அருளா! அர்த்த ராத்திரியில் கஞ்சி காமாட்சி தந்த வரப்பிரசாதமா! தெய்வப்பாலருந்தியதால் கிடைத்ததா! தேனும் தினையும் படைத்ததால் வந்ததா!!— எப்படி வந்தது இவ்வளவு பெரிய சக்தி? எண்ணிடத்தான் தோன்றும், இரண்டு நாட்களும் காஞ்சியிலே கூடிய தி. மு. க. மாநாட்டைக் கண்டோருக்கு.

சிற்றூரென அமைக்கப்பட்ட பந்தலும், வாணப்புறாக்களை 'வருக! வருக!' என அழைப்பதுபோல பறந்திட்ட கொடிகளும், அலங்கார வளைவுகளும். அற்புதமான முகப்பும், கண்ணை மட்டுமா! கருத்தையும், பறித்தன!!—இவ்வளவும் எப்படிக் கிடைத்தன? எங்கிருந்து பெற்றோம், இதற்கான சக்தி?

முதல் நாள் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் துவக்கிவைக்க கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமைவகிக்க, கழகக் காளைகள் அறிவொலி முழக்க, முடிந்தது சீர்திருத்த மாநாடு. அன்று, இரவு! கடுமழை!! பந்தல் முழுமையும், குளமாயிற்று — மாநாட்டினரின் கண்களும், குளமாயின. கஷ்டப்பட்டு அமைத்த சோலையை, கடும் புயல், தாக்கிற்றென்றால் — ஏழை உழவன் என்னென்ன எண்ணுவான்! அதே, நிலை. அன்பர் சி. வி. எம். அண்ணாமலை, செயலாளர்களாம் பெருமாள், வெங்கடேசன், சபாபதி முதலியோரைப் பார்க்க, அவர்கள் தொண்டர் படைத் தலைவர்களாம் எதிராசு, வகாப், ராசரத்தினம், சிவானந்தம் ஆகியோரைப் பார்க்க, அவர்கள் பொருளாளர் பாபுவை நோக்க, கவலையும் கஷ்டமும் அவர்கள் கண்களில் தாண்டவமாடின. காலைமலர்ந்தது! கதிரோனும் மலர்ந்தான்!! சென்று பார்த்தால், வெள்ளக் காடாகயிருந்த இடம் சிங்கார பூமியாகக் காட்சி அளித்தது. கவலையோடு காட்சி தந்த தோழர்கள், களிப்போடு உலவினர்! 'ஓர் இரவு, நாடகத்தில் 'விடிவதற்குள் முடிகிற காரியமா?' என்று கள்ள ரத்தினம் கேட்பான், டாக்டரை! அதைப்போலத்தான், எண்ணினேன், நானும். விடிவதற்குள் முடியுமா? —கேள்விக்கு, பதில் தரவில்லை தோழர்கள்! செயல் மூலம் காட்டிவிட்டனர்!! — எங்கிருந்து வந்தது, இந்த சக்தி?—ஏற்படாமலா, இருக்கும் அந்த எண்ணம்.

*

"கார், ரெடி சார்!"

'செக்—புத்தகம்..."

"அதுவும், ரெடி சார்!!"

"பிரசங்கம்பண்ணுகிற ஆட்கள்!"

"அவர்களை வண்டியில் வரச் சொல்லியிருக்கிறேன், சார்"

"சரி! இடம் எப்படி? கூட்டம் கூடுமா!!"

"கூட்டம் கூடுவதற்கான எல்லா விளம்பரங்களையும் செய்திருக்கிறேன், சார்—ஜனங்கள்தானே! — வருவார்கள்."

"என்னய்யா, இழுத்தாற்போலச் சொல்லுகிறீர்?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை — ஜனங்கள் வருவார்கள் சார்! அவர்களுக்கு முந்தியே பத்திரிகா நிருபர்கள் வந்துவிட்டார்கள்!!"

"அப்படியானால், சரி புற'படு!!"

*

நாட்டின் நிலை, இது, நமது கட்சி 'சேலத்தை'க் காண்பதற்கு முன்பு!! சிங்காரபுருடர்களும், உல்லாசச் சீமான்களும், பவனிவர—பதிகம் பாடுவோராக தொண்டர்கள் கருதப்பட்ட, காலம் அது. ஆனால், இன்று அதே, பந்தலுக்கு வெளியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வரிசை வரிசையாக நிற்கின்றனர்—உள்ளே, வா. தாய்மார்கள்பலர், தமரோடு, நிற்கின்றனர், கருத்துரை கேட்க. இளைஞர்குழாம், வீரநடைபோடுவதுபோல, வலம்வருகிறது! விழாக் கோலம்! ஆனந்த வெள்ளம்!! எதற்காக? ஏன்? எப்படி வந்தது, இந்தச் சக்தி?— எண்ணாமல் முடியுமா! அரசியல் மாநாட்டிலே பங்குகொள்ளும் திருச்சி மணியும், தூத்துக்குடி தங்கப்பழமும், அகில உலகப் புகழ் தாங்கிகள் அல்ல—அடக்கத்தோடு, தத்தமது ஊரில், தங்களாலான பணியினைச் செய்பவர்கள். ட்ரூமனைச் சந்திப்பவர்களோ, சூன்—என்—லாயுடன் கைகுலுக்குபவர்களோ, வெள்ளைச்சீமாட்டிகள் வளர்த்தவர்களோ, யாருங்கிடையாது யாநாட்டில். சாதாரணமானவர்கள்! சராசரிகள்!! எனவே, அவர்களைக் கண்டுகளிக்க அல்ல—கூடிவிட்டுப்போக அல்ல—இவ்வளவு பேரும் கூடியிருப்பது. பின், எதற்

தாக? எண்ணிடத்தான், தோன்றும் எவர்க்கும்.

அரசியல் உலகு, முன் போல் காரிருளில் இல்லை! முற்போக்கு முரசொலிக்க ஒரு கட்சி அல்ல; பல உண்டு நாட்டில். பலவித வசதிகளைப் பெற்றவையும், உண்டு எதுவுமில்லாத ஒரு கட்சி, எங்கேயோ இருப்பவர்களைக் காட்டிடவும் வாய்ப்பற்ற கட்சி, தன்னையேநம்பிய கட்சி—அதனுடைய மாநாடு—அங்கே இவ்வளவு வெற்றிவெள்ளம்! மாற்றுக் கட்சியினர் மலைக்கக்கூடிய அளவுக்கு மக்கள் திரள்!! எங்கிருந்து கிடைத்தது, அந்தச்சக்தி? நினைக்காமலிருக்கமுடியுமா!

*

ஜே! ஜே!!
வாழ்க! வாழ்க!!
அகில உலகேந்திரியே!
உன்பெருமை வருமோ?
உதாரா! விற்பன்னா!!

உத்தமா! சத்ருசங்காரா!!—இப்படிப்பட்ட புகழ்மாலைகளைச் சூடவும், பாக்குக் கூறிடவும் பலதரப்பட்டோர் இருக்கிறார்கள் எனும் கருத்தில், இந்தச் சக்தியைப்பற்றி எண்ணுவதில்லை பலர். அதற்குப் பதிலாக, 'ஏதோ கூடுகிறார்கள்! ஏதோபேசுகிறார்கள்!' என்றுஏனோதானோவென இருக்கின்றனர். எத்தனையோ கட்சிகளில் இதுவும் ஒன்று! கானமயிலின் தோகையில் காணப்படுகிற வர்ணஜாலங்களைப்போல—நாட்டின் வாழ்வில் உலவும் பலதுகளில் இதுவும் ஒன்று!! கூடுகிறார்கள் — கலைகிறார்கள், என்று எண்ணுகின்றனர். அதே நேரத்தில் எவராவது, இதுபற்றி விளக்கநேர்ந்தால், "ஆமாம், சார்! கூட்டம் நிறையத்தான் கூடுகிறதாம். நன்றாகத்தான் பேசுகிறார்களாம்." என்று சொல்லிவிட்டு, அதோடு தமது வேலை தீர்ந்தது என்று எண்ணுகிறார்கள். அந்த மாற்றார்களை, அருள் கூர்ந்து சிந்திக்கும்படி அழைக்கிறோம்! மாநாடுகளைப்பற்றி, ஏடுகள், எதுவும் போடுவதில்லை—எம்மனோரின் சொற்களை இழித்தும் சிதைத்தும் உருவாக்கும் உதவாக்கரை முயற்சியின் உலைக்கூடமாகின்றன தின ஏடுகளின் கூடங்கள்—இருந்தும், வெள்ளக்காட்டை இரவுக்குள் அகற்றும்படியான தொண்டர்களும், விழியில் ஆவலோடு மாநாடுகளில் கலந்துகொள்ளவரும் மக்களும், எப்படியேற்பட்டனர் இந்தக் கட்சிக்கு? எம்மிடம், யாரும் இல்லை காந்தி! ஸ்டாலின்!! எனக் கூறி, உதாரணம் காட்டிட. அஷ்டமாசித்திகளும் படைத்தவர் எனச் செப்புவதில், நம்பிக்கை யற்றவர்கள் நாங்கள். கடலிலே குதித்து தப்பியவர், காற்றைக் கடந்தவர், வெள்ளையனைக் கொன்றவர், வெடிகுண்டு தயாரிப்பதில் பேர்போனவர், என்போரும் கிடையாது. இதயம் உள்ளோர் இருக்கிறோம்! இளைஞர்கள் இருக்கிறோம்!! தூயஉள்ளமும், துணிவும்கொண்டோர் என்பதைத் தவிர, வறுமைப் பாம்பும் ஏழ்மை முதலையும் சதா, எங்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கின்றன. வீட்டிலோ, போராட்டம்! வெளியிலோ வசைமாரி!! நாட்டிலோ, பவனி—இது, எங்கள் வாழ்க்கை. இருந்தும், பல்கோடி மக்களின் மனதைக் கவரக்கூடிய அளவுக்கு சக்தியும், உயிரைத் துச்சமென மதிக்கும் ஆயிரக்கணக்கான வீரர்களைச் சந்திக்குமளவுக்கு வளர்ச்சியும் எப்படியேற்பட்டது? சென்னையில் கல்வித்திட்ட அறப்போர், என்றோம்! காளைகள் பவனிவரலாயினர் — மாதக் கணக்கில்!! நாடு முழுமையும், 'நான்சென்ஸ்' கண்டனப் போர், என்றோம்! ஆறாயிரம் தோழர்கள், வெஞ்சிறை புகுந்தனர்!! கல்லக்குடி உரிமைப்போர் என்றோம்!! களத்தில் குதித்தது திருச்சி மாவட்டம்!! கேட்டோர் சொன்னதென்ன? ஒரே நேரத்தில் மூன்று போராட்டங்களா! முடியுமா!! ஏன், இது?—இப்படித்தான், பேசினர். ஏசியோரும் உண்டு, நம்மை எனினும், மூன்று போராட்டங்களையும் ஒரே நேரத்தில் நடாத்தியதன் விளைவையும் அளவையும் கண்டு, உலகமே வியந்தது! அரசு, அதிர்ந்தது!! ஏன்? மாறவும்வேண்டியதாயிற்று! எப்படி முடிந்தது இது? — பணமடிக்கும் இயந்திரம் பெற்றவர்களா, நாங்கள்! பணக்கோட்டையின் பக்கத்திலிருப்பவரா!! வயிற்றைக் கழுவ, எழுத்தையும் எண்ணத்தையும் வைத்திருப்பவர்கள் சிலர்—ஏதாவது ஒரு தொழிலைச்செய்து குடும்பபாரத்தை நகர்த்துபவர்கள் பலர். எனினும், குரல்கேட்டதும், குமுறிக்கொண்டு ஓடிவருகின்றனர்! அழைப்பு என்றதும் ஆனந்த நடனமாடுகின்றனர்!! 900-பேரைச் சிறைக்கு அனுப்பி, பல சட்டசபை உறுப்பினர்கள் பங்கெடுத்தும், அண்மையில் நடைபெற்ற திருவாங்கூர் உரிமைப்போர், பிறரின் கவனத்தைக் கவரவில்லை. தி. மு. க. தலையிட்டது! தீரர்கள் 110 பேர், ஒரே நாளில் சிறைக் கோட்டம் சென்றனர்!! பிரச்னை பெரிதாயிற்று. துப்பாக்கிப் பிரயோகம் செய்து, தன் வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொள்ள வேண்டியதாயிற்று, தாணு சர்க்கார். இவ்வளவு தூரம், சக்தியும் வலிவும் எப்படியேற்பட்டது இக்கழகத்துக்கு? ஐந்து ஆண்டுகள் முடியவில்லை, நாம் பிறந்து! அதற்குள் அகில உலகத்தின் கவனத்தையும் கவர்ந்திருக்கிறோம். சில மாதங்களுக்கு முன்பு பிரபல அமெரிக்க வெளியீடான News Week இந்தியத் துணைக் கண்டத்தின் படம் ஒன்றைப் போட்டு, இந்தியாவில் வளர்ந்து வரும் அரசியல் கட்சிகளைப் பற்றி எழுதியிருந்தது. அமெரிக்க ஏடு! ஆகா, எங்களைப்பற்றி எழுதிற்று!!—என்பதற்காக, இதனை குறிப்பிடவில்லை. அந்த ஏடு, அமெரிக்க அரசாங்கத்துக்கு ஒற்றுனாகவும், பிறநாடுகளின் விபரங்களைச் சேகரித்து அளிப்பதாகவும் பணி செய்து வருகிறது. அதில், தென்னாட்டின் அரசியல் கட்சிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'தென்னிந்தியாவில், கம்யூனிஸ்டுகள் வளர்ந்திருப்பதாக நாமெல்லாம், செய்திகளைக் கேள்விப்படுகிறோம். உடனே, அந்தக் கம்யூனிஸ்டுகள் யாவரும் மாஸ்கோவின் இஷ்டப்படி நடப்பவர்கள் என்றும் எண்ணிக் கொள்கிறோம். உண்மை, அதுவல்ல. தென்னாட்டில் வளர்ந்திருக்கிற கட்சியின் பெயர் திராவிட முன்னேற்றக் கழகமாகும். அதற்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் எந்த வித வேற்றுமையும் கிடையாது, கொள்கையில். தென்னிந்தியாவை தனி நாடாக்க வேண்டும் என்கிற அடிப்படையில் வளரும் அந்தக் கட்சித்தான், எதிர்கால இந்தியாவின் முடிவை நிர்ணயிக்கப்

[9ம் பக்கம் பார்க்க]

திராவிடநாடு

காஞ்சி] 29—8—54 [ஞாயிறு

காமராசரே! கருணை பிறக்குமா?

★

வெண்ணிலாப் பருவமுள்ள வீரர்கள் பலரை, வேட்டுச் சப்தத்துக்கு இரையாக்கியிருக்கின்றனர், அரசினர்.

காலம் ஓடினாலும், குருதி கொட்டியோரின் திருநாமமும், சுட்டுத்தள்ளியோரின் எச்சரிக்கைப் பெயர்களும் என்றும் மாறாது. விடுதலைக்கு உயிரிழந்தோர், அழியாத சின்னம் ஆகிறார்கள்! இந்த ஆர்வத்தால், சாவு எமக்கோர் விளையாட்டு' என்று துந்துபி முழங்கி, குண்டடிக்கும் பீரங்கிக்கும் பயப்படாது, 'உரிமையே கடமை!' என முழக்கமிட்டு உயிரைத் தியாகம் செய்வோரின் பட்டியல், விடுதலை வேட்கை அடங்கும் வரையில் நாட்டில் அகலாது. இந்த உண்மையை, விடுதலை புரிப் பயணத்தில் ஈடுபட்ட அனைவரும் அறிவார்கள். அதிலும், வெள்ளையனின் குண்டடிக்கு கொள்கை வீரர்கள் பலரைத் தத்தம் செய்த, காங்கிரஸ்காரர்கள் நன்கு அறிவார்கள்! ஆயினும், அரசு பீடத்திலிருப்பதால், அதனை மறந்து அடிக்கடி ஆட்டம் போடத் தலைப்படுகிறார்கள்!! அதன் காரணமாக, நாட்டில் வேட்டுச் சப்தமும், சாவோசையும், சகஜமாகிவிட்டது. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சப்தம் கேட்ட போது, அரசினர் சொன்ன பதில், 'கம்யூனிஸ்டு! கம்யூனிஸ்டு அட்டகாசம்!;' என்பதாகும். புலிகள், இன்று கூண்டுக்குள்! கம்யூனிஸ்டுகள் சர்க்கார் மாளிகையில் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்கள்!! எனினும் வேட்டுச் சப்தம், குறைந்ததா?— என்றால், இல்லை! இல்லை!!

அடிக்கடி — விட்டு விட்டு — எங்காவது நடைபெறுகிறது, இத்தகைய காட்சிகள், காங்கிரஸ்காரர்களின் ஆட்சியில் மட்டுமல்ல — இன்றுள்ள அரசு அமைப்பில், யாருடைய ஆட்சியிலும் நடைபெறக்கூடும் என்பதை அண்மையில் நாஞ்சில் நாட்டில் பலர் பிணமான செய்தி, தெரிவிக்கிறது. எனவே, இந்த முறை, இப்போதுள்ள அரசின் ஊழல் என விளங்குப்! அரசியல் அமளிகளை அடக்கவும், ஆத்திரக்காரர்களைக் கட்டுப்படுத்தவும், சுட்டுக் கொல்வதுதானா முறை? அது, ஆங்கிலேயன் காலத்தில் வேண்டுமானாலும், தேவையாயிருந்திருக்கலாம்! இது, அகிம்சா ராஜ்யமாயிற்றே!! சுயராஜ்யம் மலர்ந்தது முதல் இன்று வரை, இந்தப் பாரத புண்ணிய பூமியில், அநியாயமாக அறுத்து எறியப்பட்ட குடும்பக் குலைகள் ஏராளம். அண்ணனை இழந்தோரும், ஆருயிர்க் காதலனை இழந்தோரும், மகனைப் பலி கொடுத்த மாதா பிதாக்களும், ஆயிரமாயிரம், அவர்கள் எல்லாம், கண்கலங்கி நிற்கின்றனர்!! அரசு, அவர்களின், கண்ணீரைப் பற்றி எவ்வித கவலையும் கொள்வதில்லையா என்றால் கவலை கொள்ளுகிறது — அனுதாபமும் காட்டுகிறது. அதுவும் எப்படி? ஓரவஞ்சனையுடன்! சாவின் சந்நிதானத்தில் பேதமும் பிளவும் இல்லை யென்பர் பெரியோர் — பேதையும் விரும்பான், பேதத்தை!! ஆனால், நமது சுயராஜ்ய தூண்கள், பிணத்திலும் பேதம் காட்டுகின்றனர். அரசியல் காரணமாக ஆட்சியாளரின் குண்டுகள் துளைக்கப் பிணமானவரின் குடும்பம் கோவெனக் கதறுகிறது! காது கொடார்; ஆனால், அவன் தன்னுடைய கட்சிக்காரன் எனின், ஓடோடுவர், ஓராயிரம் ஈராயிரம் காணிக்கை செலுத்த. எக்கட்சிக்காரனாயினும், ஏதோ ஒரு பொதுக் காரியத்துக்காக, அரசாங்கத்தின் அட்டகாசத்தால் உயிரை இழந்தவனாயிருந்தால், அவனது குடும்பத்தைக் காப்பதே — ஈகை! நற்பண்பு! மனிதத்தன்மை!! மனித உயிர்களிலே, பேதம் காட்டாத பெருந்தன்மை வேண்டும் அரசுக்கு எல்லோரையும் ஒருவராக எண்ணும் மனோபாவம் வேண்டும்.

ஆனால், இன்றைய ஆளவந்தாரின் ஆட்சியில் அது இல்லை! மதுரையில் ஒரு காங்கிரஸ்காரனை, அரசியல் சயமைக்குப் பலியான செய்தி கேட்டதும். பண்டித நேரு பணமனுப்பினார்! கவர்னர் பிரகாசா 'செக்' தந்தார்!! ஆனால், அதே அரசியல் கயமையின் காரணமாக, நெல்லிக் குப்பம் மஜீதும் சென்னைப் பாண்டியனும் பலியானபோது, சிறு அனுதாபம்கூடக் கிளம்பவில்லை.

கட்சிப்பூசல் காரணமாக பிணம் விழுந்தால், ஓடுகின்றனர், உதவி செய்ய. தமது கட்சிக்காரர் என்றால், டில்லிகூட, வருகிறது உதவி செய்ய! மாற்றார் பிணமானால், அனுதாபம்கூட உதிர்வதில்லை!

இப்படிப்பட்ட ஆட்சியில்! துப்பாக்கியால் துளைக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி கிடைக்கும் என எதிர்பார்ப்பது, முயற்கொம்புதான். எனினும் அரசியல் நாகரீகத்தைச் சுட்டிக் காட்டும் நினைவுடன், ஆச்சாரியாரால் பிணமாக்கப்பட்ட கல்லக்குடி, தூத்துக்குடி வீரர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என பன்முறை வலியுறுத்தினோம்! கவனிப்பதாகச் சொன்னார், ஆச்சாரியார்!! காமராஜர் ஆட்சியில், கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்த்தோம். ஏமாற்றமே, பதிலாயிருக்கிறது.

உரிமைப்போரின் காரணமாக உயிரிழந்தோருக்கு, அரசினர் உதவுவதென்பது, புதிய முறையல்ல. இரண்டு நாளைக்கு முன்பு, ஆந்திர சர்க்கார் சீராமுலு என்பாரின் குடும்பத்துக்கு ஒரு தொகை வழங்கியிருக்கிறது! ஆந்திர ராஜ்யப் பிரிவினைக் கிளர்ச்சியின்போது, போலீசாரின் குண்டுமாரிக்குப் பலியானாராம் அத்தோழர்!! அவரது குடும்பத்துக்கு, உதவித்தொகை—வழங்கியிருப்பது, பிரகாசம் சர்க்கார். அதனைக் காமராசருக்குச் சுட்டிக்காட்டுகிறோம்! கருணை இதயம் படைத்தோர், எவராயினும், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல் இது!! கருணை பிறக்குமா? —எதிர்பார்க்கலாமா, இன்னும் சில தினங்களில்.

★

[7ம் பக்கம் தொடர்ச்சி]

போகிறது,'' என்று எழுதியிருக்கிறது. அந்தளவுக்கு நம்மைப் பற்றிய செய்தி போயிருக்கிறதென்பதைவிட, அந்தளவுக்கு எப்படி நமக்கு சக்தி வந்தது?—என்பதையே, எண்ணிட வேண்டுகிறோம், தோழர்களே.

*

நல்லமனமே, நமக்கு பிரதானம்.

செம்மையான வாழ்க்கையை நுகர்ந்து கொண்டு—பணியாற்றவில்லை.

துன்பச்சூழல்! இடையே, இப்பணி.

இதுதான், நமது தகுதி! ஆனால் பெற்றிருக்கும் பரிசும் பலனும், பெரிது—பெரிது!! அதற்குள்ள காரணம், என்ன? நாம் தாங்கியிருக்கும் கொள்கை எனலாம்! கொள்கை மட்டுமிருந்து அது குரங்கு கையில் சிக்கினால், பயன் தருமா! எனவே, அதனை யேந்தி இருக்கும், நாம். நாம் மட்டுமிருந்து, நம்முடைய வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தால் போதுமா! முடியாது — ஆதலால், அந்தக் கொள்கையைப்பரப்ப நமது தோழர்கள் எடுத்துக் கொள்ளும் சீரிய முயற்சி. முயற்சி மலையளவு இருந்து, முன் கோபமும் முட்டாள் தனமும் கடுகளவும் இருந்தாலும், கனி, களாக்காயாகத்தானே ஆகும்! ஆதலால், அதனை செய்யும் போது, நாம் காட்டி வரும், தன்னடக்கம் கண்ணியம். இத்தனை குணநிசடங்களும் இருப்பதால்தான், தொண்டர்கள், ஓர் இரவுக்குள், வெள்ளக்காட்டை, பந்தலாக்க முடிகிறது! வீழ்ந்த மேடையைச் சரி செய்ய இயலுகிறது!! மக்களும். பல்லாயிரக்கணக்கில். கூடுகின்றனர்—காண! களிக்க!!

இந்த உண்மையை மறந்திட வேண்டாம், என வலியுறுத்துகிறோம் — மாற்றாரை மட்டுமல்ல, நம்மவரையும்.

சக்தி அதிகமாகி விட்டது!
திரளாகக் கூடுவர், மக்கள்!
என் கொள்கை, பொன்!
அதனை யார் தரினும்,
பெறுவோர், மகிழ்வர்.

என்ற பெருமிதத்தில், ஆழ்ந்து, அமிழ்ந்திவிடலாகாது! உடல் பருக்கப் பருக்க உள்ளம் குறுகலாகாது!! சோம்பல், ஆட்சி புரிய அனுமதிக்கக் கூடாது. அரசியல் 'ஸ்டன்டில்' ஈடுபட்டிருந்தால், எதுவேண்டுமானாலும் செய்யலாம்! அதை நாடும், காலம் வரும்வரையில் ஜீர்ணித்துக்கொள்ளும்!! நமதுபணி, அதுவல்ல. புதியதோர் தாயகம் பூக்கச் செய்யவேண்டியது, நம் கடமை. மடமை நீங்கிய மனித உலகத்தை வாழ் நாளில் உருவாக்க வேண்டும். இந்த மாபெரும் சாதனைக்கு, சக்தி கிடைக்கிறது! நாள்தோறும் கிடைக்கிறது!! வெள்ளம் போல், திரளுகிறது. அந்த வெள்ளத்தை, வெட்டி விட்டு, ஊரைப் பாழாக்கவும் செய்யலாம்! அப்படியே கிடந்து வற்றிடவும் செய்யலாம்!— அது, விடுதலை புரிக்கு வழி அமைக்காது, வீழ்ச்சி மடுவுக்கே விரட்டியோட்டும். எனவே, கூறுகிறோம் — வந்து சென்றோரே! கருத்துள்ள தோழர்காள்!! கழகத்தைப்பற்றி எண்ணுங்கள்—கடமைகளைப் பற்றியும் நினையுங்கள் — காலம், வந்து கொண்டிருக்கிறது. அதற்கானவகையில் நாட்டையும் நம்மையும் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்!— ''அரசியல் பணி, உணர்ச்சிக் கூத்துமல்ல; உல்லாசச் சோலையுமல்ல;'' என்ற பேரறிஞன் வாக்கை, நினைவில் வைத்து, நிமிடங்களையெல்லாம் கழகத்துக்காக்கி, பணி புரிவீர்! படை, பெருக்குவீர்!! சக்தி, பெற்றிருக்கிறோம் — சாதிப்போம் வெற்றிகளை.

✲

5-ம் பக்கத் தொடர்ச்சி

தீட்டுகிறது—பட்டமளிப்பைக் கண்டித்து. பண்டிதரோ, பழைய சுல்தானைப்போல, இருக்கிறார், டில்லியில்!!

பட்டமாம்! யாருக்கு? பெரியவர்களுக்கு!!

அரசுக்கு அவர்கள் செய்த சேவையைப் பாராட்டவாம்.

வேண்டியதுதான்! — இவரால், நாட்டுக்கு இவ்வளவு பலன் கிடைத்தது.

புதிய ஆராய்ச்சி மூலம், நாட்டின் புகழை உயர்த்திய நல்லறிஞர் இவர்.

எழுத்தால், சமூகத்தில் புதுஒளி பரப்பிய புனிதர், இவர்.

—என்று, நாட்டுக்குழைத்த நல்லவர்களை அரசு பாராட்டத்தான் வேண்டும்! அப்படிப்பட்ட பாராட்டுதல், ரஷ்யநாட்டில்கூட இருக்கிறது!! நாட்டுக்கு நல்லது செய்பவர்களை அரசு கௌரவிப்பதும் புகழ்வதும், அவசியம்தான், ஆலையில் அதிக உற்பத்தி செய்தோன், கழனியில் விளைச்சலை அதிகமாக்கினோன், போரில் வீரத்தைக்காட்டினோன்—என்று பிரித்து, அவர்களுக்கு 'ஸ்டாலின்' பதக்கமும் 'லெனின்' பதக்கமும் வழங்குகிறார்களாம், ரஷ்யாவில். ஊக்கத்தையும் முயற்சியையும் தூண்டிட, அது, தேவையே! ஆனால், இங்கு? எந்தத் தகுதிக்காகப் பட்டம் அளிக்கப்படுகிறது. சேவைக்காகவா! அல்ல, அல்ல. தெரிந்தவர்கள்—பெரியவர்கள்—அவர்களுக்கும் நமக்கும் உறவிருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்கிற ஆசைக்காக. இப்படிப் பட்டங்களை வழங்குவதால், தம்மைநாடிப்பட்டம்பெறும் கும்பல் ஒன்று, எப்போதும் வட்டமிடும், அவர்களை அடிவருடிகளாக்கிக் கொள்ளலாம் என்ற ஆசைக்காக! இந்த பேராசையைத்தான், 'வீண் செயல்' எனச் சொல்லுகிறது ஹரிஜன் ஏடு. 'விபரீதம்'—எனக் கண்டிக்கிறார், ஆஷாதேவி. பழைய ராஜாக்கள் ஆஸ்தானவித்வான்களை அமர்த்திக் கொள்வார்களாம்—ஆங்காங்கும் அன்பைப் பரப்பப் பலரை தட்டிக்கொடுப்பார்களாம், மானியங்கள் தருவதன் மூலம். அதே, ஆசை பண்டிதருக்கு! ஆட்களைப் பிடிக்க பட்டம்தரப்படுகிறது— நாட்டை வாழ்விக்க அல்ல. பெரிய மனிதர்களுக்குப் பட்டப்சூட்டப்படுகிறது—அரிய தொண்டர்களுக்கு அல்ல. அதனால்தான், ஆஷா வீசி எறிகிறார்! நற்றொண்டர்கள் நடைப்பிணமாக வலம் வருகின்றனர்!!

❀

திருமண விழா

2-9-54 வியாழன் காலையில் தோழியர் மீராவுக்கும் குடியாத்தம் அரங்கநாதனுக்கும், அரக்கோணத்தில் திருமணம் நடைபெறும். தோழர் ஈழத்தடிகளின் தலைமையில் தோழர் கி. மனோகரனும் தோழர்களும் பேசுவர்.

ஆத்ம ஞானி அரண்மனையில்!

[அரங்கண்ணல்]

"ஜொலிக்கிறது, பார்த்தீரா?"

"ஆமாம், தங்கச்சிலை!"

"சிலையா? பாபி! தெய்வ உருவமடா!!

"ஆமாம்! ஆமாம்!!"

"எதற்குக் கொடுத்தார்?"

*

அழகான போட்டோ!

அதைச் சுற்றி வெள்ளிச் சட்டம்!

தருகிறார், அவர்! தலைகுனிந்து பெற்றுக்கொள்ளுகிறார், இவர்!

*

கண்டிருக்கலாம், ஏடுகளில். கனம் ராசேந்திரருக்கு, ஸ்ரீமத் சிருங்கேரி மடத்தார், பீதாம்பரம் ஒன்று சூட்டியதை! அந்த ஆடை பொன்னால் செய்ததென மின்னிற்றாம்— அதன் இருமருங்கும் செய்யப்பட்ட ஜரிகை வேலைகள் கண்ணைக் கவர்ந்ததாம்! பீதாம்பரம் போர்த்தியதோடு அல்ல, பீகார் வெள்ள நிவாரண நிதிக்கும் 'ஜகத்குரு' ரூ. 1101 அளித்தாராம்! பொன்னாடை போர்த்தி பொற்கிழி அளித்ததோடு விடுமா, மடாதிபதி. தன்னுடைய ஞாபகார்த்தம் எப்போதும் இருக்கும்படி ஏதாவது செய்யவேண்டாம்? அதற்காக அழகான போட்டோ ஒன்று எடுத்து-தன்னுடைய போட்டோதான்!—அதற்கு வெள்ளிச் சட்டமிட்டு, அளித்தாராம்! அதோடு, சாரதாம்பாளின் உருவச் சிலையொன்றும் தந்தாராம், சிருங்கேரியார்—அது, தங்கத்தால் செய்யப் பட்டதாம்!!

*

மடாதிபதி வழங்கிய பரிசுகள்:-

1. தங்கச் சிலை.
2. வெள்ளிச் சட்டம் போட்ட போட்டோ.
3. பீதாம்பரம்.
4 ரூபாய் 1101.

இவைகளைப் பெற்றுக்கொண்ட ராசேந்திரர், அவைகளை ஏந்திய வண்ணம், பல்லாயிரவர் கண்டு நிற்க பவனி வந்தாராம் சிருங்கேரி வீதிகளில்! ஜே—கோஷமும் இருந்ததாம்!! மடத்தில் வீற்றிருக்கும் மார்க்க சீலர்கள் பலரும், ஜே! ஜே!! என்று கூவினராம். கையிலே பூச்செண்டும் தலையிலே பீதாம்பரமும் கட்டிய வண்ணம், நாமதாரி ஒருவரின் அருகில் அன்பர் ராசேந்திரர் படத்தில் நிற்கும் காட்சியைக் காணும் போது, அட, பாபமே!— எனத் தோன்றுகிறது. என் செய்வார், அவர்? போனார்! கொடுத்ததைப் பெற்றுக்கொண்டார்! ஜனாதிபதியாச்சே-சகலமும் சமம் என்று எண்ணவேண்டியதுதானே!!

*

சிருங்கேரி மடத்து ஜகத்குருக்கு, இந்த இகலோக இச்சைகளில் கிடந்துழலும் ராசேந்திரரை இழுத்து வந்து, போற்றிப் பூமாலை சூட்ட வேண்டிய அவசியம் என்ன வந்ததென்பீர்! ஆண்டவனுக்கும் அடியாருக்குமிடையே தொடர்பை உண்டுபண்ணும் ஆத்ம ஞானி, கேவலம் ஒரு அரசியல் வாதியை அழைத்து வந்து, தங்கச் சிலையும் வெள்ளிச் சட்டமும் பீதாம்பரமும் பணத் தொகையும் காணிக்கை செலுத்திடக் காரணம் யாதோ, என எண்ணுவீர்!! சுவர்க்கப் பூமியின், சாவி, ராசேந்திரரிடம் இருக்கிறது — அதைப் பெற்றுக்கொள்வோம், என்பதற்காக அல்ல, இந்தப் பாராட்டு. எல்லாம், மாயப் பிரபஞ்சத்தின் மீதுள்ள — ஆசைதான்! அன்பர் ராசேந்திரர், பெரியதோர் ராஜரிஷி—அவரைப்போற்றிடின் ஆனந்தம் கிடைக்கும், என்பதற்காக அல்ல!! கேவலம், மண்ணாசையும், பொன்னாசையும் யாரை விட்டது? அதற்காகத்தான், இத்தனை வைபோகமும்! சிருங்கேரி மடத்து ஆத்மஞானி தந்த பொருள்களையெல்லாம் பெற்றுக்கொண்டு வெளியிலே பவனி வந்த ராசேந்திரரின் கண்களில், ஜாகிரில் வேலை பார்க்கும் குடிமக்கள், கூடிநின்று வேடிக்கை பார்ப்பது தென்பட்டிருக்கும்! மடத்துக்குள், அவர் கண்ட காட்சிக்கும் வீதியில் அவர் காணும் காட்சிக்குமுள்ள வித்தியாசம் விளங்காமலா இருக்கும்? தின்று கொழுத்த உடல்களைக் கண்டேன்! வறுமை மென்று வீசிய சக்கைகளைக் காண்கிறேன் இங்கே! பீதாம்பரம், பெற்றேன் உள்ளே! பீத்தலுடையுடன் நிற்கும் குடிபடைகளைக் காண்கிறேன், இங்கே! ஜொலித்தது தேஜஸ், ஜகத்குரு முகத்தில்! இங்கும் ஜொலிக்கிறது அழுது வடியும் கண்ணீர், சூரிய ஒளியில் படும் போது!! அங்கே, அரண்மனையைக்கண்டேன்! இங்கே அன்றாடம் காய்ச்சிகளின் குடிசைகளைக் காண்கிறேன்!! — என்று எண்ணாமலா யிருந்திருப்பார். நிச்சயம், எண்ணியிருக்கத்தான் வேண்டும். அதுபோது, எதற்காக இந்த மடாதிபதி, தனக்கு இவ்வளவு பரிசுகள் வழங்கினார் என்ற உண்மையும் தெரிந்திருக்கத்தான் வேண்டும்.

'எஜமான்! என்னை எப்படியாவது காப்பாத்திடுங்கோ. போறாத வேளை. தெரியாத்தனமா, திருடிவிட்டேன். புள்ளைக்குட்டிக்காரன். இனிமே, செய்யவே! இதோ, நான் திருடிய சொத்திலே பாதியை வைக்கிறேன் உங்களுக்கு! இதை எடுத்துக் கொண்டு, என்னை விடுதலை செய்து விடுங்கோ!", திருடி அகப்பட்ட தேசப்பன் கதற கருணையும் குடும்பப்பாரமும் உள்ள போலீஸ் 'சரி! போடா!!' என்று விட்டால், மறுதினமே 'ஆர்டர்' வரும், அவருக்கு! லஞ்சம் வாங்கிய உண்மை, 'டிஸ்மிஸ்' செய்கிறோம் என்று!! ஆனால், இதோ, லஞ்சம் தந்திருக்கிறார், மடாதிபதி. யாருக்கு? இந்திய உபகண்டத்தின் ஜனாதிபதிக்கு! பெற்றுக் கொண்டு, பெருமிதமாக மடத்தினர் ஜே போட, பகிரங்கமாகப் பவனியும் வந்திருக்கிறார்!! அழைப்பை மறுத்து, 'வரமுடியாது' என்று கூறியிருந்தால் ஜனாதிபதிக்கு என்ன கிடைத்திருக்கும்? பீதாம்பரத்துக்குப் பதில் பழிச்சொல்லும், வெள்ளிப் போட்டோவுக்குப் பதில் கண்டன அறிக்கையும், தங்கச் சிலைக்

குப் பதில் 'நாஸ்திகன்' எனும் பட்டமும், அளிக்கப்பட்டிருக்கும்! மடத்தின் தூதுவர்களாக நாடெங்குமுள்ள ஆத்மஞானப்படை, தன்னுடைய பிரச்சார பீரங்கிகளை முடுக்கிவிட்டு, பழியையும் இழிச்சொல்லையும், எடுத்து வீசியிருக்கும். அதற்குப் பயந்துதான், போனார் போலும் ராசேந்திரர்! அதனால்தான் பரிசுகளைப் பெற்றுக்கொண்டபின், அவர் முகம் அவ்வளவு வேதனையாகத் தோன்றுகிறது போலும்!! உண்மைதானே—அண்மையில்தான் சிருங்கேரி ஜாகிர் பற்றிய பிரச்னை, எல்லோருடைய கருத்துக்களையும் குடைந்தது. மடத்துக்குச்சொந்தமான நிலங்களை மக்கள் வசமே விடுவதென, சட்டம் ஒன்று கொண்டுவர முனைந்தது, மைசூர் சர்க்கார். சனாதனிகள் சல்லடம் கட்டினர்! ஏடுகள், எரிமலைகள் ஆயின!! எதிர்ப்பு—குழப்பம்—ஆத்திரம்—ஐயோ, ஆபத்து! எனும் ஓலம்—அத்தனையும் புறப்பட்டது, மும்மலம் நீக்கி, முக்திப் பாதை தேடும், இந்த ஜீவன் முக்தர்களிடமிருந்து. மைசூர் அரசு அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுக்காதபடி காப்பாற்றிட வேண்டும் எமை! — என்று கரங்கூப்பி 'லஞ்சம்'—அளிப்பது போலத்தான், இப்போது, இந்த வரவேற்பு, ஜனாதிபதிக்கு. இந்த சூட்சுமத்தை அறியாத அளவுக்கு, மரக்கட்டையாயிருக்க முடியாது, பிரசாத்! மடாதிபதிகளின் போக போக்கியங்களையும், சொத்து சுகத்தின் மீது அவர்களுக்குள்ள ஆசையும், தெரியாமலிராது தேசம் ஆளும் சிலருக்கு!! சிருங்கேரி போல எத்தனை இடத்திலிருந்து, இது போன்ற சந்தர்ப்பங்களில் அவலக்குரல்கள் வருகின்றன. ஆதலால், எண்ணித்தான் இருப்பார், ராசேந்திரர்! என்ன செய்யமுடியும்? அவரோ, ஜனாதிபதி! அழைப்பை மறுத்தால், சனாதனம் சீறும்!! முடியுமா? அந்தச் சனாதனத்தின் மடியில்தானே சட்டமும் அரசும் அமைக்கப்பட்டிருக்கிறது—ஆகவே, போனார்! பவனி வந்திருக்கிறார்!!

*

தங்கச்சிலை! கண்ணைப்பறிக்கிறது!

அழகான வேலைப்பாடு. சாரதாம்பாளின், உரு.

எனக்குக் கொடுத்தார்கள்—ஏன்?

ஏன் எனக்குக் கொடுத்தார்கள்?

*

நான் கேட்கவில்லை — இந்தப் போட்டோவை.

சிருங்கேரி மடாதிபதியின் படமாம், இது.

வெள்ளிச் சட்டம் போட்டு! — எனக்குக் கொடுத்தார்கள்.

ஏன்?

*

பீதாம்பரம் — ஏன், எனக்கு! ரூ 1101, பீகார் வெள்ள நிதிக்காம் —என்னிடம்தானா, தரவேண்டும்?

*

இருப்பிடம் திரும்பியபின் இவவாறு எண்ணாமலிருந்திருக்க முடியாது, அவர். அப்போது என்னென்ன தோன்றியிருக்கும், அவர் மனதில். கடந்த வாரம். தங்கம் வெட்டியெடுககப்படும் கோலாருக்குச் சென்று, அங்குள்ள, காட்சிகளைக் கண்டுவந்திருக்கிறார். எனவே ஜொலிக்கும், தங்கம், பேசாமலா இருக்கும் அவரிடம். தங்கவயலின் அதிபதி, ராசேந்திரரிடம் சொன்னாராம் "இதோ, பாருங்கள் பித்தான்! சட்டைக்குவைத்து தைக்கும் இந்த பித்தான் அளவுக்குத் தங்கம் கிடைக்கவேண்டுமென்றால் ஒருடன் பாறையை நாங்கள் பதப்படுத்த வேண்டியிருக்கிறது. உடைத்து, வெட்டி, ரசாயன மாற்றங்கள் யாவும் செய்தால்தான், இந்த பித்தான் அளவுக்குத் தங்கத்தைப் பெறமுடிகிறது" என்பதாக. சிருங்கேரியார் தந்திருப்பது, சிலை! அதுவும் தங்கத்திலே!! எவ்வளவு டன் பாறையைக் குடைந்திருப்பர், மக்கள்? சிருங்கேரியார் ஆண்டவனை நாடி, அர்த்த ராத்திரியில் பூஜித்து, 'அப்பா! மணிவாசகனுக்காக நரியைப் பரியாக்கினையாமே! எனக்காக இந்த மண்ணைத் தங்கமாக்கித்தா!! சண்டாளர்கள் என் ஜாகிரைக் கைப்பற்ற வருகிறார்கள். ஜனாதிபதியைப் பார்த்து சரிசெய்கிறேன். தட்டாமல், செய்!" என்று வேண்டி, தன்னுடைய தபோ வலிமையால், பெற்றதல்ல, அத்தங்கம். சேட்கோடியிடம் செப்பியிருப்பார், மாற்றுக் குறையாத தங்கம் தேவையென்று! சேட், கணக்கரிடம் தெரிவித்திருப்பார்!! கணக்கர், கடைக்குச்சென்று எடைபோட்டு, எடையுடன் தன்னுடைய நிலையையும் கூட்டி, வாங்கி வந்திருப்பார்! பொற் கொல்லர் அழைக்கப்பட்டு, அவருடைய கைவண்ணம்பட்டு, சிலை, சாரதாம்பாள் உருவில் தயாராகியிருக்கிறது!!—சராசரி, கூட அறியும் இந்த உண்மை ஜனாதிபதியின் மனதில் படாமலா இருக்கும்? தங்கத்தால் சிலை! வெள்ளியால், பேழை! பீதாம்பரம்! பொற் குவியல்! — ஒவ்வொன்றும், ஓராயிரம் கதைகளைக் கூறாதா, ராசேந்திரரிடம்.

"கழனியில் உழுதேன்! சாப்பாட்டுக்குக்கூட வழியில்லை — விளைந்த நெல்லை கொண்டுவந்துவிட்டார்கள், மடாலயத்தார்"

"பாபங்கள் போகுமென்று நான் செலுத்திய காணிக்கை மூட்டைதான் இது!"

"பளபளக்கிறதல்லவா, பீதாம்பரம்? அதை நெய்தவன் வாழ்வும் அப்படித்தானிருக்குமென்று எண்ணாதீர்! செய்வதோ, பீதாம்பரம்—அணிவதோ, கந்தல்"

இது போல, நெஞ்சுருக்கும் நிகழ்ச்சிகளைக் கூறும்! அவைகளைக் காணும்போது, அகமகிழ்வா, செய்வார், பிரசாத். வெளிக்குக் காட்டிக்கொள்ளலாமேயொழிய, உள்ளக் குகையில், ஓராயிரம் எண்ணங்கள் மோதத்தானே செய்யும்?

*

"அடடா! சிருங்கேரி ஜகத்குரு எடுத்துக்கொடுக்க, எவ்வளவு பணிவன்புடன் வாங்கிக்கொண்டார், தெரியுமோ?"

"ஜனாதிபதியானாலும், ஜகத்குருக்கு அடுத்தபடிதானேடா!"

"அது சரி! சாரதாம்பாள் சிலை, என்ன அழகு தெரியுமா?"

"அத்தனையும் தங்கம்!"

*

மடத்தைச்சார்ந்த இடங்களிலே, இப்படியிருக்கும் உரையாடல்! ஊரில் குடியிருக்கும் மக்களுக்கு அனுதினமும் நடைபெறும் ஆயிரக் கணக்கான உற்சவங்களில் இதுவும்

ஒன்றாய்த் தோன்றியிருக்கும்! வேடிக்கைபார்த்து விட்டு, வீட்டுக்குப் போயிருப்பார்கள்! ஆனால், நாடும் வாழ்வும், நலம் பெறவேண்டுமென விரும்புவன் மனதில் என்ன தோன்றும்? "ஏ, நாடே! நீ, இப்படியா சிக்கிச் சிதைய வேண்டும். படித்தவர்—பட்டம் பெற்றவர் — ஏழையின் கண்ணீருக்குள்ள சக்தியை அறியும் வல்லமை பெற்றவர் — இந்த ராசேந்திரர், அவரை அழைக்கின்றனர், மடத்தார்! அவரும் போகிறார்—அங்குள்ள அட்டகாசங்களையும் வைபவங்களையும் பார்க்கிறார். வெறுப்பு இருந்தாலும், வெளியில் சொல்லுவதில்லை! சலிப்பை, காட்டிக் கொள்வதில்லை! பக்தனைப்போலிருந்துவிட்டு, பவனி வருகிறார். பேசினால், அரசுப் பொறுப்பு நீங்கியகுற்றம் வருமாம்! அதனால், பலரைப்போல அவரும், வேடம் போடுகிறார்! இந்த விபரீதம், எப்போது அடங்கும்? அக்ரமத்தை அரசே ஆதரிக்கும் அநீதி எப்போது ஒழியும்!", என்று தானே, எண்ணுவான். அதையே, நாமும், எண்ணி, இரக்கப்படுகிறோம், வைதீகத்தின் வெள்ளாடு போல, தலையாட்டும் இந்த வீரர்களைப்பார்த்து! வேதனைப்படுகிறோம், எப்போது விடுதலை பெறுவர் இந்தப் போலிக் கூட்டத்திடமிருந்து, என்று!! ✻

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு என்ன தேவைப்படும். அதை எப்படி உற்பத்தி செய்தால் மக்களை மயக்கி புதுத் தேவைகளை உண்டுபண்ணலாம். இவைகளே முதலாளிகளின் முழுநோக்கமாயிருக்கும். உண்மையிலேயே உலகத்தில் ஏற்பட்டிருக்கும் பலவித முன்னேற்றங்களுக்கும் இதுவே காரணம். அதனால்தான் ஆடம் ஸ்மித் என்ற பொருளாதார நிபுணர் தனிமனிதனின் சுயநலம் தானாகவே சமூகத்தின் பொதுநலனுக்கு அனுகூலமாக முடியும் என்று கூறியிருக்கிறார்.

போட்டிப் பொருளாதார அமைப்பில் கெடுதல்களும் உண்டு மக்களுடைய அன்றாடத் தேவைகளை அறிந்துகொண்டு அதற்குத் தக்க பொருள்களை உற்பத்தி செய்யாமல், மக்கள் தேவை எதுவாயிருக்கலாம், எவ்வளவிருக்கலாம் என்ற யூகத்தால் எதிர்பார்த்து முதலாளிகள் உற்பத்திசெய்கிறார்கள். உற்பத்திசெய்தபின், மக்களுக்கு அந்தத் தேவையை உண்டாக்கி, சாமான்களை விற்பதற்கு பகீரதப் பிரயத்தனம் எடுக்கிறார்கள், மிக்க பொருட்செலவில் விளம்பரங்கள் மூலமாக. இந்த விளம்பரச் செலவுகளெல்லாம் பொருட்களின் விலையுடன்தான் கூட்டப்படுகிறது. அல்லது விலையை உயர்த்தாமல் பொருட்களின் தரத்தைக் குறைத்து விளம்பரச் செலவைச் சரிக்கட்டவேண்டிவரும்.

தேவையை எதிர்பார்த்து உற்பத்தி செய்தால், தேக்கங்கள் ஏற்பட்டு அதனால் நஷ்டமும், விளம்பரச் செலவால் விரயமும் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது.

முதலாளிகள் சில சமயங்களில் ஒன்று கூடிக்கொண்டு சரக்குகளைப் பதுக்கி வைத்துக்கொண்டு விற்பனையைக் குறைத்து, விலையை ஏற்றுவதும், சில சமயங்களில் அதிக உற்பத்தி ஏற்பட்டதும் விலை இறங்கி விடுமெனப் பயந்து சரக்குகளை அழித்து விடுவதும், உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்காகத் தங்களுக்குள் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதும் உண்டு. அவ்வாறு செய்வதற்குச் சுதந்தரம் உண்டு போட்டி முறையில். இருபது ஆண்டுகளுக்கு முன் பிரேஸில் பகுதியில் காபி உற்பத்தியாளர்களெல்லாம் காபிக்கொட்டை உற்பத்தி அதிகமாகிவிட்டதென்று தெரிந்து ஒரு ஆண்டில் உற்பத்தியானபாதிச் சரக்குகளை எரித்துவிட்டார்கள், செயற்கையாக காபிக்கொட்டைக்கு கிராக்கி உண்டாவதற்காக. மற்றொருசமயம் ரப்பர் உற்பத்தி பெருகி அதனால் ரப்பர் உலக மார்க்கெட்டில் மலிவுற்று விலையை இறக்கி விற்கும்படி நேரிட்டபோது, இந்தியா, சிலோன் மலேயா முதலிய நாடுகளில் உள்ள ரப்பர் தோட்ட முதலாளிகள் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டு ஒவ்வொரு தோட்டத்திலும் இத்தனை சதவிகித மரங்களில் பால் எடுக்காமல் விட்டுவிடுவது என்று ஒப்பந்தம் செய்து கொண்டு, உலகச் சந்தையில் செயற்கையாக ஒருவித தட்டு உண்டுபண்ணினார்கள். அது போலவே அமெரிக்காவில் கோதுமை உற்பத்தி தேவைக்கு மேல் அதிகமாக இருந்தபோது அதனால் கோதுமை மலிவாக, குறைந்த விலைக்கு விற்றால்தான் உற்பத்தி செய்ததை எல்லாம் விற்க முடியும் என்ற நிலை ஏற்பட்ட பொழுது, உற்பத்தியாளர்கள் ஒன்றுகூடி ஒரு ஆண்டு உற்பத்தியில் பாதி கோதுமையை கடலில் கொட்டிவிட்டு நாட்டில் ஒரு செயற்கைப் பஞ்சத்தை உண்டுபண்ணி அதன் விலை ஏறும்படி செய்தனர்.

ஏராளமான செல்வத்திற்கிடையே பஞ்சம் என்ற நம்பமுடியாத ஒரு நிலை முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் கண்கூடாகக் காணப்பட்டது.

இன்னும், ஒரு பெரிய முதலாளி வேண்டுமென்றே தன் சரக்குகளைக் குறைந்த விலைக்குவிற்று மற்ற சிறிய முதலாளிகள் நஷ்டமடையச் செய்து, ஒன்று அவர்கள் அந்தத் தொழிலை மூடிவிட்டு ஓடிவிடவோ அல்லது தாமாகவே பெரிய முதலாளியிடம் வந்து சரணடைந்து தங்கள் தொழிற்சாலையை விற்றுவிடும்படியான நிலையை உண்டாக்கி, கடைசியில் போட்டி மறைந்ததும், விலையைமுதலிலிருந்ததைவிட அதிகமாக ஏற்றி விற்பதற்கும் இந்த அமைப்பில் இடமுண்டு.

சிலசமயங்களில் மூன்று அல்லது நான்கு பெரிய முதலாளிகள் சிறிது காலம் தங்களுக்குள்போட்டிபோட்டுக் கொண்டு, அதனால் ஏற்படும் நஷ்டத்தை உணர்ந்து, தங்களுக்குள் ஒரு முடிவுக்குவந்து, விற்பனையாகும் பிரதேசத்தையே மூன்று அல்லது நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு ஆளுக்கு ஒரு பகுதியாகப் போட்டியின்றி மற்றவரின் தொல்லையின்றி ஏகபோக உரிமையாக வைத்துக் கொண்டு விலையை இஷ்டம்போல் ஏற்றி விற்பதற்கும் வழியிருக்கிறது போட்டி முறையில்.

இவையெல்லாவற்றையும் விட பெரியதீங்கு, பாங்குகளால்ஏற்படும். ஒரு நாட்டில் மக்கள் தங்கள் சேமிப்புப்பணத்தை தானே அவர்கள் பாங்குகளில் போடுகிறார்கள்? அதனால் ஒரு தரம் போட்ட பணத்தை அடிக்கடி திரும்ப எடுப்பதில்லை. இந்தத் தைரியத்தை மனதில் கொண்டுமக்கள் போட்டு வைத்திருக்கும் பணத்தை ஆஸ்திவாரமாகக்கொண்டு பாங்கர்கள் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அவ்வாறு கடன் கொடுக்கும்போது பாங்குகள் ரொக்கக்கடன்களாக (ரூபாய் நாணயம், அல்லது ரூபாய் நோட்டுகளையோ மட்டும் தான்) கொடுத்தால் எவ்வளவு ரொக்கப் பணம் ஒரு பாங்கில் போடப்பட்டிருக்கிறதோ அவ்வளவு தான் கடனாகக் கொடுக்க முடியும். ஆனால் பாங்குகள் கடன் கொடுக்கும்போது ரொக்கத்தைக் கொடுப்பதில்லை தங்கள் வாக்குறுதியையே தான் கொடுக்கின்றன. பாங்கின் வாக்குறுதிச் சீட்டு, அதாவது ஒரு செக் ரொக்கத்தைப் போல் மதிப்புடையது.

ஒருவர் பாங்கிலிருந்து 1000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டால், ஆயிரம் ரூபாயையும் ரொக்கமாக உடனே எடுத்துக்கொண்டு போய் விடுவதில்லை. தொழில் அபிவிருத்தி, வியாபாரம் இவைகளுக்காக கடன் வாங்குவதையே இங்கு குறிப்பிடுகிறோம். இந்தியாவில் கல்யாணம் முதலிய ஆடம்பரச் செலவுக்காக கடன் வாங்கும் வழக்கத்தை இங்கு குறிப்பிடவில்லை. (இன்னும் வரும்)

16. ஆறுமுகத்தின் ஆனந்தமும், அவதியும்!

அன்றிரவு வந்தது நல்லமுத்து தான் என்று உனக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்?''

ஆறுமுகம் இதற்குப்பதில் சொல்வதற்குள் மானேஜர் குறுக்கிட்டார். "ஏன் சார், தெரிந்தவிஷயங்களையே திரும்பத்திரும்பக்கேட்டு அவனைத் தொந்தரவு செய்கிறீர்கள்! என்றார்.

அவனுக்கு மதிப்புக் கொடுத்துப் பரிந்துபேசும் மானேஜரை நிமிர்ந்து பார்த்தான் ஆறுமுகம். அப்பொழுது அவன் கண்ட காட்சி அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மானேஜர் முன்னால் நின்று கொண்டிருந்தார். அவர் பின்னால் பாஸ்கரும் புஷ்பாவும் ஹாலின் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தனர்.

ஆறுமுகம் தலையைத் தூக்கியதும் புஷ்பாவின் தோளைத் தொட்டுத் தொட்டு'' எதையோ சொல்ல வேண்டாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டி அவனுக்கு சைகை காண்பித்தார், பாஸ்கர். முதலில் ஆறுமுகத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் 'காலைசெய்தி' நிருபர் மறுபடியும் 'நல்லமுத்து இந்த "பங்களாவுக்கு ஏன் வந்தார் என்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டதும் விளங்கி விட்டது.

புஷ்பாவிற்கும் நல்லமுத்துவுக்கும் இருந்த தொடர்பை மறைக்கச் சொல்லி பாஸ்கர் தன்னைத் தூண்டுகிறார், என்பதை அவன் ஒரு விநாடியிலே புரிந்துகொண்டான். இனி மேல் அவனுக்கென்ன பயம்? தன்னுடைய எஜமானியின் நல்ல பெயரைக் காப்பாற்றும் பொறுப்புத் தன்னிடம் தரப்பட்டுவிட்டபிறகு அவன் ஏன் பயப்படவேண்டும்? தைரியமாகத் தலையைத் தூக்கி நிருபர்களுக்குப் பதில்சொல்ல ஆரம்பித்தான்.

"நல்லமுத்து ஏன்வந்தார் என்று எனக்குத் தெரியாது சார்! ஆனால் அவர்தான் வந்தார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்!'' என்று கூறிவிட்டுப் பாஸ்கருக்குத் திருப்திதானா என்று அவர் முகத்தைப் பார்த்தான்.

பாஸ்கரும் புஷ்பாவும் முழுத் திருப்தியோடு ஆறுமுகத்தைப் பார்த்தனர்.

தன்னுடைய முதலாளியின் முழு நம்பிக்கைக்கும் தான் பாத்திரமாகி விட்டது கண்டு மகிழ்ந்த ஆறுமுகம் நிருபர்களின் கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தைரியமான குரலில் கொடுத்தான்.

"நல்லமுத்துவிற்கும் உங்கள் எஜமானரின் மறைவுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமென்று நீ எண்ணுகிறாயா?''

"அதெப்படி நான் கூறுவதுங்க. போலீஸ்காரங்களைத்தான் கேட்கணும்!''

"அன்றிரவு உங்கள் ஐயா பங்களாவிற்கு வரும்போது களைப்பாக இருந்தாரா?''

"எப்போதுமே அவர் களைப்புற்றவர்போல்தானிருப்பார், வயதாகி விட்ட காரணத்தால்!''

"நல்லமுத்துவைத் தவிர வேறு யாரும் இந்த பங்களாவில் அன்றிரவு இல்லையென்று உன்னால் நிச்சயமாகக் கூறமுடியுமா?''

"நல்லமுத்துவை நான் பார்த்தேன்; அவ்வளவுதான் எனக்குத் தெரியும்!''

அவனுடைய பதிலைப் பார்த்து பெருமைப்படுவதுபோல் தலையை அசைத்தார், பாஸ்கர். ஆறுமுகம் பெருமிதம் அடைந்தான்.

"வந்தவர் நல்லமுத்துதான் என்பதற்கு என்ன ஆதாரம்? நல்லமுத்துவை இதற்கு முன் நீ பார்த்திருக்கிறாயா?''

"என்னுங்க, அப்படிக் கேட்கிறீர்கள். அவர், எங்க சேரிக்குவந்து பலதடவை பிரசங்கம் செய்திருக்கிறாரே!''

மறுபடியும் கேள்விகேட்க ஆரம்பிக்கும் முன் பாஸ்கர் ஆறுமுகத்தின் ஆபத்தைத் தகர்க்க முன் வந்தார்.

"போதும் சார். நீங்கள் திரும்பத் திரும்ப அவனைக் கேட்டு மேலும் என்ன தெரிந்துகொள்ளப்போகிறீர்கள். எப்படியோ என் தந்தையைப் பலிகொண்டுவிட்டனர், இந்த அக்கிரமக்காரர்கள். இனி மேல் அவ்விதம் நடக்கமுடியாதவாறு அந்தப் பசங்களை ஒழித்துக் கட்டணும். அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நல்லவிதமாக ரிப்போர்ட் எழுதுங்கள். நீங்கள் எழுதுவதைப் பொறுத்துத்தான் நாளைக்கு மக்கள் விழிப்படைந்து உண்மையை உணர்ந்து இந்தக் காலிப் பசங்களை விரட்டணும், வாருங்கள், எல்லோரும் காபி சாப்பிடலாம்!'' என்று கூப்பிட்டு

கொண்டே திரும்பி ஹாலுக்குள் நுழைந்தார்.

'காபி' என்றதும் அத்தனை நிருபர்களும் காபிராக்களை கவருக்குள் போட்டுக்கொண்டு பாஸ்கர் பின்னாலேயே சென்றுவிட்டனர்.

ஆறுமுகம் தனக்குக் கிடைத்த வெற்றியையும், பாஸ்கருக்கும் புஷ்பாவுக்கும் மிக அருகில் தான் சென்றுவிட்டதையும் நினைத்து மகிழ்ந்தவண்ணம், மெதுவாகக்கீழே இறங்கி ஹால் வாயிற்படியினருகில் வந்து, உள்ளே பத்திரிகைக்காரர்களும், தன் முதலாளியும் பேசிக் கொள்வதைக் கவனித்தவாறு நின்று கொண்டான்.

சுமார் 10 நிமிடங்கள் உள்ளே மௌனம் நிலவியது. எல்லோரும் காபி சாப்பிடுவதிலேயே ஆழ்ந்திருந்தனர்.

ஆறுமுகத்திற்கு அவனை அறியாமலேயே ஆனந்தம் வந்தது. அவனுக்குத் தெரியாமலேயே மிகப் பந்தோபஸ்தான இடத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறான், அவன்! நாளைய தினம் பத்திரிகை நிருபர்கள், ஏன் இன்று மாலையேகூட நல்லமுத்துவின் கொடூரச் செயலையும் உத்தமநாதரின் பரிதாப மரணத்தையும் விவரித்து எழுதிவிடுவார்கள். அவன்பேரில் இனிமேல் யாருமே குற்றம் சுமத்தத் துணியமாட்டார்கள். ஏன்? அவன் சின்ன முதலாளியேகூட அவனை எப்போதும் தன் பக்கத்திலேயேதான் வைத்துக் கொள்வார். இனி, அவனுக்குக் கிடைத்த ஒரே சந்தர்ப்பம் இனி நிரந்தரமாகிவிடும். வழக்கப்படி காரோட்டிக்கொண்டு, 'பாக்கிய பவனத்தின் சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டு திருப்தியோடு வாழலாம். மாதம்முடிந்தால் முழுசா நாற்பது ரூபாய் சம்பளம் கிடைக்கும். அவ்வளவையும் எடுத்துக் கொண்டுபோய் பொன்னிக்கு நல்ல புடவையா இரண்டு வாங்கிக்கொடுக்கணும். பாவம்......அவள் தன்னுடைய கிழிந்த புடவைத் தலைப்பை விரித்து எத்தனை நாட்கள் அதை அவனுக்குப் படுக்கையாக்கி இருக்கிறாள்! அதற்குக் கைமாறாக இது வரை அவன் எதுவுமே செய்ததில்லை. செய்யாதது மாத்திரமில்லை, தன்னிடம் டீக்குக் காசு இல்லாத போது அவளுடைய சுருக்குப் பையில் கிடந்த ஓரிரு அணாக்களைக் கூட எடுத்து வந்திருக்கிறான். சேச்சே......எவ்வளவு மிருகத்தனமாக இதுவரை அவனிருந்துவிட்டான். அவளுக்குக் கண்ணாடி வளையல்கூட அவன் வாங்கிக் கொடுத்ததில்லை. இனிமேல் இம்மாதிரி அவளை விட்டுவைப்பது தவறு.

அவளை மாத்திரமென்ன......? செங்கமலத்தைக் கூட அப்படி விட்டு வைக்கக் கூடாதுதான். உத்தமநாதபுரம் பூராவும் 'பஜாரி' என்று பதினாறு வயதுதாண்டுவதற்குள்ளேயே பேரெடுத்துவிட்டாள், அவள். அவள் எக்கேடுகெட்டாலும் நல்ல சோறுவது சாப்பிடச்செய்யணும், கண்டபடி இரவெல்லாம் கூத்தாடிவிட்டுப் பகல் சூரியன் தன் ஒளிக்கதிர்களை முழுப்பலத்தோடு பூமியில் செலுத்தும் வரை தூங்குகிறாள். இம்மாதிரியே அவள் வாழ்க்கை நீடித்தால், அவளுடைய முடிவு சீக்கிரம்வந்துவிடும். ஆகவே அவளைப்பற்றிக்கூட அவன் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். கடைசியாக அவன் தாயைப்பற்றிக் கூட நினைத்தான்!

அவளுடைய உடலில் சதைப் பற்றே இல்லையே! ஆம் மெலிந்து, கண்கள் குழிவிழுந்து பரிதாபமாக உழைத்து உழைத்து உருக்குலைந்து நிற்கிறாள். ஒவ்வொரு நாளும் அவளுடைய கண்கள் கண்ணீரைக் கக்கிக் கக்கித்தான் சுத்தமாகிக் கொண்டிருந்தன. அவள் ஒருநாளாவது சரியாகச் சாப்பிட்டதில்லை. ஏதோ எச்சில் இலை பொறுக்கித் தின்பதுபோல, உத்தமநாதபுரத்து டீக்கடைக்குச் சென்று அங்கு பாத்திரம் கழுவிக்கொடுத்துவிட்டு அதற்குக் கைமாறாக அந்த மலையாளி கொடுக்கும் பழைய மசால் வடையையும், ரொட்டியையும் வாங்கிவருவாள். அதுதான் ஒவ்வொருநாளும் அவளுக்குக் கிடைக்கும் உயர்ந்த சாப்பாடு.

இனிமேல் இந்தமாதிரி நிலைமைகளை வளரவிட ஆறுமுகம் விரும்பவில்லை. தன்னுடைய குடும்பத்தை ஒழுங்குக்குக் கொண்டுவர முடிவு செய்தான். இந்த வழக்கு ஒரு தினுசா முடிவடையட்டும், பின்னால் அம்மாவையும் செங்கமலத்தையும் கூட்டிவைத்து தானும்பொன்னியும் சேர்ந்து வாழ முடிவு செய்திருப்பதைக் கூறி முழுக்குடும்பத்தையும் ஒன்றாகச் சேர்க்கவேண்டும். எல்லோருமா ஒன்று சேர்ந்து கொஞ்சத்துக்குக் கொஞ்சம் சீரான வாழ்க்கை வாழவேண்டும்!

இப்படியெல்லாம் திட்டமிட்ட வண்ணம் நின்று கொண்டிருந்தான் ஆறுமுகம்.

உள்ளே காபிகுடித்துவிட்டு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தனர் பத்திரிகை நிருபர்கள். ஆரம்பத்திலிருந்ததை விட கலகலப்பாக அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார், பாஸ்கர். மானேஜர் கூட ஒரு சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு ஏதோ வேடிக்கை பேசிக் கொண்டிருந்தார்.

இந்தக் கலகலப்பான நேரத்தில் தான், குப்பன் கையில் ஒரு பூட்ஸைத் தூக்கிக் கொண்டு "ஐயா...! ஐயா...!" என்று அலறிக் கொண்டு ஓடிவந்தான்.

ஆறுமுகம் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"என்னடா......!" என்ற சப்தம் போட்டவண்ணம் சாம்பசிவம் வெளியே வந்தார். அவர் பின்னாலேயே பாஸ்கர், பத்திரிகை நிருபர்கள் எல்லோரும் வெளியே வந்தனர்.

வாயிற்படியில் ஏறிய குப்பன் கையிலிருந்த ஒத்தை பூட்ஸைப் பார்த்தவுடன் பாஸ்கரும், சாம்பசிவமும் அப்படியே திடுக்கிட்டு "ஆ......ஏதுடா இது?" என்று ஒரே சமயத்தில் கேட்டனர்.

குப்பன் பதில் கூறாமல் விழித்தான். "தோட்...ட...த்தில்......" என்று மூச்சுத்திணற இழுத்தான்.

ஆறுமுகத்தின் தலையில் இடி விழுவதுபோல உணர்ச்சி ஏற்பட்டது. "ஐயோ!" என்று அந்தப் பூட்ஸைப் பார்த்தவன் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டான். அடுத்துக் குப்பன் கூறப்போவதை (நீதிபதியின் தீர்ப்பை, கொலைகாரன் கேட்பதைப்போல) இருதயம் வேகமாக அடித்துக்கொள்ளும் நிலையில் கேட்டான்,

“அங்கே, மூங்கிப் புதருக்கருகில் கிடந்துதுங்க......” என்று இழுத்தான் குப்பன்.

இதற்குள் பத்திரிகையாளர்கள் “என்ன சார்! இந்த பூட்ஸ் யாருடையது—உங்கள் தந்தையாருடையதா? ஏன் அப்படி முழிக்கிறீர்கள்......” என்றனர்.

“சும்மா இருங்கள் சார். ஏதோ புதிய விஷயம் வெளியாகிறதுபோலிருக்கிறது” என்று கூறிக்கொண்டேபாஸ்கர் அந்தப்பூட்ஸை வாங்கிக்கொண்டே “எங்கேடா கிடந்தது?” என்று கேட்டுக்கொண்டே முன்னால் சென்றார். அவர் பின்னால் எல்லோரும் நடந்தனர்.

குப்பன் முன்னால் ஓடினான். ஆறுமுகத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இமயமலையில் ஏறுகிறவன், பனிமலை தன்மீது வந்து விழுவதைக் கண்டு எப்படிப் பயப்படுவானோ, அப்படி, தன்னை நோக்கி ஏதோ ஆபத்து வந்து கொண்டிருப்பதுபோல அவனுக்கு பயம் வந்தது. கால்கள் அவனையறியாமலே வெடவெடத்தன. கைகள் நடுங்கின. உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. ஒரு நிமிடத்திற்குமுன் எவ்வளவு பெரிய மனக்கோட்டைகள் கட்டினான். இப்பொழுது எல்லாம் எங்கோ மறைந்துவிட்டன. தூக்குமேடை ஏறுபவன்போல் பயந்து, பயந்து அவனும் இறங்கித் தோட்டத்தை நோக்கி நடந்தான்.

“பங்களாவின் கோடியில், அந்த மூங்கிற் புதரின் அருகில் அவன் செல்லும் முன்பே, அங்கிருந்த பத்திரிகை நிருபர்கள் ஏதோ சலசலவென்று பேசிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது. அவர்கள் நகரும்பொழுது, அந்த இடைவெளியில் குப்பன் மண்வெட்டியோடு நிற்பது அவன் கண்களுக்குத் தெரிந்தது.

சேச்சே......! என்ன பைத்யக்காரத்தனம் செய்கிறான். இனியும் அந்த இடத்திலே நின்றுகொண்டிருந்தால், அவன்கதி என்ன ஆவது? அவர்கள்தான் எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட்டனரே. இனிக் குழிதோண்டிப் பிணத்தை எடுக்க வேண்டியதுதான் பாக்கி. அப்புறம் ......! ஐயோ! அதை நினைக்கவும் அவனுக்குப் பயமாக இருந்தது. இனிமேல் யோசிப்பதற்குக்கூட அவனுக்கு நேரமில்லை. அந்தப் பங்களாவின் அருகில் இருப்பதே அவனுடைய உயிருக்கு ஆபத்தாகிவிடும். “ஓடு! ஓடு!! ஓடு!!!” என்று யாரோ அவன் உள்ளிருந்து கூறுவதுபோலத் தோன்றியது. அடுத்த வினாடியே அவன் கால்கள் அவனையறியாமலேயே ஓட ஆரம்பித்துவிட்டன.

ஓடினான்! ஓடினான்!! வேகமாக ஓடினான்!!!

சிறிது நேரத்தில் உடலெல்லாம் வியர்த்து நனைந்த நிலையில், பொன்னியின் குடிசையில் வந்துவிழுந்தான், ஆறுமுகம்.

குடிசையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த பொன்னி திடுக்கிட்டு எழுந்தாள்.

“ஐயோ, என்னாங்கிறே......ஏன் இப்படி அவதி, அவதின்னு ஓடியாந்து விழுந்தே?” என்று கேட்டுக்கொண்டே குடிசைக்கு வெளியே பார்த்தாள். அங்கு யாரையும் காணுமல், அவனருகில் வந்தாள்.

ஆறுமுகத்தின் சட்டைகளெல்லாம் நனைந்து, மூஞ்சியெல்லாம் வியர்த்து ஒரே ஈரமாக இருந்தது.

“ஐயோ, ஏன் அப்படிப் பார்க்கிறே!”

“ஏன், என்னமோ கொலை செய்தவனாட்டமா, திருட்டு விழி விழிக்கிறே?”

“அட, நான் கேட்கிறேன், பதில் சொல்லக்கூடமுடியலையா...கள்ளுக் குடிச்சவனாட்டம் முழிக்கிறியே என்னா? இந்த எழவுக்குத்தானா நேற்று ராத்திரியிலே இருந்து நீ எப்போ வருவேன்னு காத்துக்கிட்டிருந்தேன்?” என்று கடுகடுத்த முகத்துடன் கூறிவிட்டு மறுபடியும் போய் உட்கார்ந்துகொண்டாள்.

“கள்...!” என்று அவள்கூறிய மறுகணமே ஆறுமுகம் துள்ளி எழுந்தான்.

நேற்று முன் தினம் இரவு உத்தமநாதருக்குக் கார் ஓட்டியது; அவர் நளினியைச் சந்தித்தது; நளினியும் அவரும் நடத்திய திருவிளையாடல்கள்; நளினி கொடுத்த பிரியாணி; அவள் கடைசியாகக் கொடுத்த அந்த ‘விஸ்கி’ பாட்டில்......! ஆம்! அந்தக் கட்டத்திற்கு அவன் நினைவு வந்தபோதுதான் பொன்னி ‘கள்’ என்றாள். கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தான் ஆறுமுகம்.

“என்னாங்கிறே, திடும் என்று துடிச்சு எழுந்திருக்கிறே...” என்றாள் பொன்னி.

ஆறுமுகத்திற்கு அந்த விஸ்கி பாட்டில் ஞாபகம்தான் வந்தது.

சேச்சே! என்ன பைத்தியக்காரத்தனம் செய்துவிட்டான். அந்த பாட்டில் அப்படியே கார்சீட்டினடியில் கிடக்கிறது. இரண்டுநாளாய் நடந்த மற்ற விஷயங்களில், அதை அறவே மறந்து விட்டான்.

ஒருவேளை அதை யாராவது பார்த்து விட்டால்...! ஆறுமுகத்தின் அடிவயிறு குலுக்கியது.

“என்னடி சொன்னே...?” என்றான்

“அப்பா...இவ்வளவு நாழியாச்சா வாய் திறக்க. ஏன் இப்படி ஓடிவந்தேன்னு கேட்டேன்!”

ஆறுமுகம் பேசாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்னமோ, உங்க எஜமானரை முந்தாநாள் இராத்திரியிலேயிருந்து காணோமாமே? யாரோ கொலை செய்துட்டாங்களாமே?” என்று கூறினாள் பொன்னி.

“அதுகிடக்கட்டும். முதலிலே அந்த முடிச்சை எடுத்துவா!” என்றான்.

“இன்றைக்கு என்ன, ஒரே கடுப்பாயிருக்கே! புது வேலை கிடைத்த முறுக்கா......” என்று கூறிக்கொண்டே எழுந்து போய் அந்த முடிச்சை எடுத்து வந்தாள் பொன்னி. (தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at “Dravidanadu” Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.